விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 102 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 17 திங்கட்கிழமை (31.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= வருடம்



## தையிட்டி திஸ்ஸ விகாரை
## தனியார் காணிகளாயின் உரியவர்களுக்குக் கிடைக்கும்
### புத்தசாசன அமைச்சர் உறுதி

(கொழும்பு)

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரை வளாகத்தில் ▷04

## இவ்வருட இறுதிக்குள் மாகாண சபைத் தேர்தல்
### வாக்குறுதி நிறைவேறும் – பிமல்

(யாழ்ப்பாணம்)

இந்த வருட இறுதிக்குள் மாகாண சபைத் தேர்தல் இடம்பெறும் எனத் தேசிய மக்கள் சக்தி அரசு உறுதிபடத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து நேற்று யாழ்ப்பாணத்தில் ▷15

## இறுதிக்கட்டத்தை எட்டிய தபால் வாக்குச்சீட்டை அச்சிடும் பணி

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டி ▷15

## சர்வதேச விமான நிலையமாக பலாலி விமான நிலையம் மாறும்
### 4 மாதத்தில் நடக்கும் – அமைச்சர் பிமல்



(பலாலி)

பலாலி விமான நிலையம் நான்கு மாதங்களுக்குள் சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்தப்படும் என சிவில் போக்குவரத்து விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதியளித்துள்ளார்.


யாழ்ப்பாணம் பலாலி விமான ▷15

## சங்குப்பிட்டியில் 45 கி.கஞ்சா மீட்பு மூவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டிப் பாலத்தை அண்மித்த ஏ32 வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 45 கிலோகிராம் ▷15

# மோடியை வாலாஜப்படுத்த தயாராகிறது அநுர அரசு
## ஏப்.5 இல் அமோக வரவேற்பு



*(கொழும்பு)*

எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ள பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஏப்ரல் 5ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமோக வரவேற்பு வழங்கப் படவுள்ளது. (04ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் தடை விதிக்க வேண்டும்
### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து



▷03

## முன்னாள் அமைச்சர் டிரான் அலஸுக்கு சி.ஐ.டி அழைப்பு

(கொழும்பு)

2023ஆம் ஆண்டு மாத்தறை வெலிகமவில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் ▷15

## யாழ் – திருச்சி இடையே நேரடி விமான சேவை
### 47 ஆண்டுகளின் பின்னர் மீள ஆரம்பம்



(பலாலி)

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்துக்கும் தமிழ்நாடு திருச்சி விமான நிலையத்துக்கும் இடையி ▷15

### – ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் –
## ஏப்.21க்கு முன்னர் சூத்திரதாரிகளை அம்பலப்படுத்துவோம் – ஜனாதிபதி



(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களை 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் வெளிப்படுத்த ▷15

### கிளி.தருமபுரம் பகுதியில்
## பொறுப்பதிகாரிக்கு இலஞ்சம் கொடுக்க முற்பட்டவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு இலஞ்சம் வழங்க முற்பட்ட இங்கிலாந்து பிரஜாவுரிமை கொண்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் ▷15

## உஷ்ண நிலை இன்றும் தொடரும்

(கொழும்பு)

வடக்கு உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் இன்றும் எச்சரிக்கை மட்டத்தை விட அதிக வெப்பநிலை நிலவக் கூடும் என சிரேஸ்ட வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் தெரிவித்தார். (ந-7)

## கிளீன் ஸ்ரீ லங்காவால் கிளீனான யாழ்.மத்திய பேருந்து நிலையம்



(யாழ்ப்பாணம்)

கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தை ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியர்
விஜயபாலா அவர்களின் அன்புத் தந்தை

## செல்லர் கணபதிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற பரிசாரகர்,
யாழ்.போதனா வைத்தியசாலை)


அவர்களின் மரணச்செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

(C-2579)

அன்னை மடியில் 09.06.1928 — ஆண்டவன் அடியில் 30.03.2025

உங்கள் பிரிவால் துயருறும்
ஆசிரியர் கழகம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
திரு. ஜோ.ஜெயகாந்தன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்

## ஜோசப் இராசநாயகம்

அவர்களின் மறைவு குறித்து எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த துயரம் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


மண்ணில் 26.03.1941 — விண்ணில் 28.03.2025

பிரிவுத்துயரில் : ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

(3794)

# மரண அறிவித்தல்

பிறப்பு 27 - 09 - 1948



இறப்பு 26 - 03 - 2025

## முருகேசு சின்னப்பா (சின்ராசா)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வைமன் வீதி, வித்தியாபுரம், ஒட்டுசுட்டானை நிரந்தர வசிப்பிடமாகவும் பாடசாலை வீதி, பூந்தோட்டம், வவுனியாவை தற்காலிக முகவரியாகவும் கொண்ட முருகேசு சின்னப்பா(சின்ராசா) அவர்கள் 26.03.2025 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் முத்துலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் நாகேந்திரராசா(அதிபர் - ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்), சுகந்தன்(பிரான்ஸ்), ரேக்கா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலராணி(கிராம உத்தியோகத்தர் - பண்டாரவன்னி), சர்மி(பிரான்ஸ்), மயூரன்(ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் சஞ்சீவினி, பிரகாசன், ஆரூவன், கவின், அபினா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வைமன் வீதி, வித்தியாபுரம், ஒட்டுசுட்டானிலுள்ள மகன் நாகேந்திரராசாவின் இல்லத்தில் நாளை 01.04.2025 செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணிக்கு நடைபெற்று காலை 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பேராறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-2580) தகவல் : சி.நாகேந்திரராசா(மகன்)

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 20.11.1956 — ஆண்டவன் அடியில் 29.03.2025

## திருமதி வசந்தா ஸ்ரீஸ்காந்தன்

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தா ஸ்ரீஸ்காந்தன் அவர்கள் 29.03.2025 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - புஸ்பவதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஸ்ரீஸ்காந்தன் (உரிமையாளர் - அம்பாள் களஞ்சியம்) அவர்களின் அன்பு மனைவியும் சிவகஜனி (சாலினி, வளர்மதி முன்பள்ளி ஆசிரியர், கொக்குவில்), ஷாரங்கன் (முகாமையாளர் வியாபார முன்னேற்றம், விரிவுரையாளர் - ESOFT METRO CAMPUS, JAFFNA) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற வரதா மற்றும் வதனி ஆகியோரின் அன்புச் சகோதரியும் உருத்திரக்கண்ணா அவர்களின் அன்பு மாமியாரும் ஷஸ்வினி, ஸ்ரீவர்ணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் புஸ்பமாலா, இரஞ்சிதமாலா, ஸ்ரீதரன் (பொலிவியா), காலஞ்சென்றவர்களான ஜீவமாலா, சிறிவரதன் மற்றும் ஸ்ரீபாலன் (ஜேர்மனி), ஜெயமாலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் இரத்தினவேல் (அத்தான்), தர்மசேனன், விஜயலலிதா, காலஞ்சென்ற தங்கேஸ்வரன் மற்றும் கலாராணி, அருளானந்தம், பற்றீசியா ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 31.03.2025 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் புங்குடுதீவில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 3 மணியளவில் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

36/1, பிரம்படி 1ம் ஒழுங்கை,
கொக்குவில்.
1ம் வட்டாரம், புங்குடுதீவு.

தகவல் : குடும்பத்தினர்
074 132 2350,
076 644 2214,
077 936 2632

(C-2577)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் தடை விதிக்க வேண்டும்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து

(கொழும்பு)

**போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத்தளபதிகளுக்கு பிரித்தானியா பயணத்தடை விதித்துள்ளதை நாம் வரவேற்பதுடன் சில முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் இவ்வாறான தடைகள் விதிக்கப்படவேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.**





வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்கள்,

இலங்கை அரசானது நீண்ட காலமாக பொறுப்புக் கூறலில் இருந்து தவறியுள்ளது. இதனால் நாம் சர்வதேச நீதிகோரி தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

இன்று போர்க்குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டதாக சில இராணுவத் தளபதிகளுக்கு பிரித்தானியா பயணத் தடைவித்துள்ளதன் மூலம் இனப்படுகொலை ஒன்று இங்கு நடந்துள்ளதை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதை உணரமுடியும்.

இவ்வாறு தடைவிதிக்கப்பட வேண்டிய பல இராணுவத்தினர் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளும் உள்ளனர். அவர்கள் மீதும் இவ்வாறான தடைகளை விதிக்க வேண்டும்.

அனைத்துலக நாடுகளும் இந்தப் பயணத்தடைகளை விதித்து குற்றம் செய்தவர்களை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் நிறுத்தி சர்வதேச பொறிமுறையூடாக எமக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும். இதுவே எமது எதிர்பார்ப்பு என அவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தின் போது "நாங்கள் கேட்பது இழப்பீட்டையோ மரணச் சான்றிதழையோ அல்ல; முறையான நீதி விசாரணையே", கொலைகாரனால் நீதி வழங்க முடியுமா?" போன்ற பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-8-315)

# முதியோர் உதவித்தொகை பெறுநர்களை அதிகரிக்க முடிவு

(கொழும்பு)

முதியோர் உதவித்தொகை பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விடயத்தை கிராமப் புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், உதவித் தொகை பெறுபவர்களின் எண்ணிக்கையினை ஒரு மில்லியனாக அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த விடயம் குறித்த கலந்துரையாடல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-8)

# விடைத்தாள் திருத்தும் பணிகள் நாளை முதல் ஆரம்பம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகள் நாளை செவ்வாய்க் கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள்களின் மதிப்பீடு 1,066 மதிப்பீட்டு மையங்களில் நடைபெறும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

முதல் கட்ட விடைத்தாள் மதிப்பீடு ஏப்ரல் 1 முதல் 10 வரை நடைபெற உள்ளது. இதற்காக ஏறக் குறைய 16,000 ஆசிரியர்கள் இணைந்து கொள்வார்கள் எனவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-8)

# இளையோரிடையே அதிகரிக்கும் எச்.ஐ.வி தொற்று

(கொழும்பு)

நாட்டிலுள்ள இளைஞர்களிடையே எச்.ஐ.வி தொற்று அதிகரித்து வருவதாக சுகா தார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் 15 முதல் 24 வயதுக்கிடைப்பட்ட 115 பேருக்கு எச்.ஐ. வி தொற்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளதாக தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் நாட்டில் 824 பேருக்கு எச்.ஐ.வி தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 718 பேர் ஆண்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் 47 பேர் எய்ட்ஸ் தொற்றுக்குள்ளான நிலையில் உயிரிழந்தனர். இலங்கையில் எச்.ஐ.வி பரவல் அதிகரித்து வருவதால் உடனடியாக பரிசோதனை செய்து கொள்ளுமாறு தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-8)




தாளையம்பதி
ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தானம்
சுன்னாகம்-அறிவித்தல்

சுன்னாகம் தாளையடி ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ பெருவிழாவானது எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம்திகதி காலை 9.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பங்குனி உத்தரத்தை தீர்த்தோற்சவமாகக் கொண்டு பதின்மூன்று தினங்கள் நடைபெற ஐயனார் திருவருள் கைகூடியுள்ளது. திருவிழாக் காலங்களிலும் ஏனைய காலங்களிலும் அடியவர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதோடு வழிபாடுகளையும் தொண்டுகளையும் ஆற்றி ஐயனார் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

திருப்பணி வேலைகளுக்கும் ஆலய தேவைகளுக்கும் பொது மக்களிடமிருந்து நிதி சேகரித்தலும் பொருள் சேகரித்தலும் ஆலயத்துக்குரிய அசைவுள்ள அசைவற்ற சொத்துக்களைப் பராமரித்தலும் பேணுதலும் போன்ற செயற்பாடுகளுக்கு ஆலய தர்மகர்த்தாக்களால் நியமிக்கப்பட்ட பரிபாலன சபையினர் மற்றும் திருப்பணிச் சபையினர் மட்டுமே உரித்துடையவர்கள். சுன்னாகம் ஐயனார் ஆலயத்தின் பெயரில் அல்லது ஐயனார் தொண்டர் அமைப்பின் பெயரில் எந்த தனிநபரோ, அமைப்புக்களோ, சபைகளோ, கழகங்களோ இயங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்பதனை அடியவர்களுக்குத் தெளிவுபடுத்துகின்றோம். இவ்வாறான சட்ட ரீதியற்ற தனிநபர்கள் மற்றும் அமைப்புக்களோடு ஆலயம் தொடர்பான நிதி, பொருள் கொடுக்கல் வாங்கல் செய்வது பொருத்தமற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆலயம் தொடர்பான நிதி. பொருள் கொடுக்கல் வாங்கல்களை செய்யும் போது எமது ஆலய வங்கிக் கணக்கிலக்கத்தினூடாகவோ நேரடியாகவோ கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு பற்றுச் சீட்டுகளைப் பெற்று உறுதிப்படுத்திக்கொள்ளலாம். அத்துடன் எமது முகநூல் முகவரியான அரிகரபுத்திரன், வட்ஸ் அப் குழுமமான தாளையடி அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தானம் ஆகிய இரண்டு சமூகத் தொடர்பு ஊடகங்கள் மட்டுமே எமது உத்தியோகபூர்வ தளங்கள் ஆகும். இவை தவிர்ந்த ஏனைய முகநூல் முகவரிகள், வட்ஸ் அப் குழுமங்கள் என்பன ஆலயத்துடன் தொடர்பற்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆலய வங்கிக் க/கு இல -**

- 90894935 ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் ஆலயம் (BOC Chunnakam)
- 8107017729 ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் ஆலயம் (Commercial bank)

(C-2578) நன்றி

**ஆலய ஆதீனகர்த்தாக்களும்,**
**திருப்பணிச் சபையினரும்,**
**பரிபாலன சபையினரும்.**
**தாளையடி ஸ்ரீ அ ரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தானம், சுன்னாகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கிய வேங்கையாக ஸ்ரார்க் பெற்ற வெற்றியால் மகிழ்வாக டில்லி



## மீண்டும் சறுக்கியது சன்ரைசர்ஸ்

ஸ்ரார்க் "வேகம்" கைகொடுக்க, டில்லி அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

விசாகப்பட்டினத்தில் நடந்த பிரிமியர் லீக் போட்டியில் டில்லி, ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணித் தலைவர் பட் கம்மின்ஸ், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

ஹைதராபாத் அணிக்கு இம்முறை அதிரடி துவக்கம் கிடைக்கவில்லை. அபிஷேக் (1) ரன் அவுட்டானார். ஸ்ரார்க் ஓவரில் (3வது) இஷான் கிஷன் (2), நிதிஷ் குமார் (0) வெளியேறினர். தொடர்ந்து அசத்திய ஸ்ரார்க் பந்தில் "ஆபத்தான" டிராவிஸ் ஹெட் (22) ஆட்டமிழக்க, 4.1 ஓவர்களில் 37/4 ஓட்டங்கள் எடுத்துத் தத்தளித்தது.

**அனிகேத் அரைச்சதம்**

பின் அனிகேத் வர்மா, கிளாசன் போராடினர். கிளாசன் 32 ஓட்டங்கள் எடுத்தார். குல்தீப் "சுழலில்" கம்மின்ஸ் (2) சிக்கினார். அரைச்சதம் கடந்த அனிகேத் (74, 5X4, 6X6), குல்தீப் பந்தில் மெக்குர்க்கின் கலக்கல் "பிடியெடுப்பில்" ஆட்டமிழக்க, ஓட்ட எண்ணிக்கை உயர வாய்ப்பு இல்லாமல் போனது. ஹர்ஷல் படேல் (5), முல்டரை (9) பெவிலியினுக்கு அனுப்பிய ஸ்ரார்க், 5 விக்கெட்டுக்களை எடுத்து அசத்தினார்.

ஹைதராபாத் அணி 18.4 ஓவர்களில் 163 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

**டு பிளசி விளாசல்**

சுலப இலக்கை விரட்டிய டில்லி அணிக்கு டு பிளசி, மெக்குர்க் நல்ல ஆரம்பம் கொடுத்தனர். முதல் விக்கெட்டுக்காக 81 ஓட்டங்கள் சேர்த்தனர். ஜீஷன் அன்சாரி ஓவரில் (10ஆவது) டு பிளசி (50, 3X4, 3X6)), மெக்குர்க் (38) ஆட்டமிழந்தனர். ஷமி ஓவரில் 2 பவுண்டரி, 1 சிக்சர் விளாசிய ராகுல், 15 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின் அபிஷேக் போரல், ஸ்டப்ஸ் அசத்தினர். முல்டர் ஓவரில் 2 பவுண்டரி, 1 சிக்சர் அடித்த ஸ்ரப்ஸ்விரைவான வெற்றி தேடித் தந்தார். டில்லி அணி 16 ஓவரில் 166/3 ஓட்டங்கள் எடுத்து, தொடர்ந்து இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது. போரல் (34), ஸ்ரப்ஸ் (21) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ந-7)

# வெற்றிப் பாதைக்கு திரும்பியது ராஜஸ்தான்

## இறுதி ஓவரில் வீழ்ந்தது சென்னை

கடைசி ஓவரில் ஏமாற்றிய சென்னை அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. அணித் தலைவர் ருதுராஜின் அரைச்சதம் வீணானது.

அசாமின் கவுகாத்தியில் நடந்த பிரிமியர் லீக் போட்டியில் சென்னை - ராஜஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணித் தலைவர் ருதுராஜ், பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**நிதிஷ் அபாரம்**

ராஜஸ்தான் அணிக்கு யாஷஸ்வி ஜெய்ஸ்வால் (4) ஏமாற்றினார். அஷ்வின் வீசிய 5வது ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த நிதிஷ் ராணா, கலீல் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி, 21 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். இரண்டாவது விக்கெட்டுக்கு 82 ஓட்டங்கள் சேர்த்த போது நூர் அகமது "சுழலில்" சஞ்சு சாம்சன் (20) சிக்கினார். அஷ்வின் வீசிய 12வது ஓவரின் முதலிரண்டு பந்தில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த நிதிஷ் (81 ரன், 5 சிக்சர், 10 பவுண்டரி), அடுத்த பந்தில் "ஸ்டம்பிங்" ஆனார்.

**விக்கெட் சரிவு**

துருவ் ஜூரெல் (3), வணிந்து ஹசரங்க (4) சொற்ப ஓட்ங்களில் ஆட்டமிழந்தனர். நூர் அகமட் வீசிய 17வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்த அணித் தலைவர் ரியான் பராக் (37), பதிரானா "வேகத்தில்" போல்டானார். ஆர்ச்சர் (0), கார்த்திகேயா (1) நிலைக்கவில்லை. ஹெட்மயர் (19) ஆறுதல் கொடுத்தார்.

ராஜஸ்தான் அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்கள் எடுத்தது. தீக்ஷன (2), தேஷ்பாண்டே (1) அவுட்டாகாமல் இருந்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்னை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. ஜடேஜா (32), ஓவர்டன் (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சமீபத்தில் பெங்களூருவிடம் வீழ்ந்த சென்னை அணி, தொடர்ந்து 2வது தோல்வியைத் தழுவியது. ஹைதராபாத், கொல்கத்தாவிடம் தோற்ற ராஜஸ்தான் அணி, முதல் வெற்றியைப் பதிவு செய்தது. (ந-7)

## தனியார் ...

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தருமாறு புத்தசாசன திணைக்களம் மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுத்துள்ளதாகப் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

அத்துடன் தையிட்டி திஸ்ஸ விகாரை விடயத்தினைப் பயன்படுத்தி இனவாதத்தினை தோற்றுவிப்பதற்கு இடமளிக்கப்போவதில்லை எனவும் முழுமையான ஆய்வின் பின்னர் தனியார் காணிகள் காணி உரிமையாளர்களிடம் மீளளிக்கும் தனது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்றும் அவர் கூறினார்.

தையிட்டியில் திஸ்ஸ விகாரைப் பகுதியில் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தையிட்டியில் தனியார் காணியில் திஸ்ஸ விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை அண்மித்த பகுதிகளையும் கையகப்படுத்தப்படும் செயற்பாடுகள் தொடர்வதாகவும் அப்பகுதி மக்கள் என்னிடத்தில் முறைப்பாடு அளித்தனர். அதனையடுத்து நான் அவர்களை அழைத்துக் கலந்துரையாடி முழுமையான விடயங்களைப் பெற்றுக் கொண்டேன்.

அதேபோன்று திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்ட நிலமானது முறையாகப் பெறப்பட்டதாக விகாராதிபதி கூறியிருக்கின்றார். அவரிடத்திலும் அதற்கான சான்றாதார ஆவணங்களைக் கோரியுள்ளேன்.

எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விடயதானத்தின் பிரகாரம், விகாரை முறையாகப் பதிவு செய்யப்பட்டதா என்பன உள்ளிட்ட விடயங்களை மட்டுமே கையாள முடியும். அவை அமைக்கப்படுகின்ற காணிகளில் பிரச்சினைகள் அல்லது சர்ச்சைகள் காணப்பட்டால் அது தொடர்பில் காணி அமைச்சே நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அந்தவகையில் குறித்த தகவல்களைப் பெற்று காணி அமைச்சின் ஊடாக முழுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்விதமான நிலையில் கடந்த 23 ஆம் திகதி திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியில் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்திருந்தன.

அதுபற்றிய காணொளிகள், புகைப்படங்களையும் நான் பார்த்தேன். அதனையடுத்து எமது அமைச்சின் செயலாளர், புத்தசாசன திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டவர்களிடத்தில் அது பற்றி ஆராய்ந்து அறிக்கை வழங்குமாறு கோரியுள்ளேன். மேலும் இந்த நிர்மாணத்துடன் பாதுகாப்புப் படையினருக்கும் தொடர்புகள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளன.

ஆகவே பாதுகாப்பு அமைச்சிடத்திலும் திஸ்ஸ விகாரையுடன் இணைந்து செயற்படுகின்ற படைப்பிரிவுகளிடம் அதன் வகிபாகம் தொடர்பில் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

காணி உரிமையாளர்களைச் சந்தித்தபோது நான் ஒருவிடயத்தினைக் கூறியிருந்தேன். காணியின் உரிமை பொதுமக்களுக்கானது என்றால் அது அவர்களிடத்திலேயே ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது தான் எனது நிலைப்பாடாகும். அரசாங்கத்தின் நிலைப்பாடும் அது தான். அந்த வகையில் உரிய ஆய்வுகளைச் செய்து இறுதி முடிவுகளின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்படும்.

அதேநேரம், திஸ்ஸ விகாரை விடயத்தினை மையப்படுத்தி இனவாத, மதவாதத்தை மீண்டும் தோற்றுவிப்பதற்கு வடக்கிலும் தெற்கிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்கப்போவதில்லை. அதில் ஜனாதிபதி அநுர குமாரவும் உறுதியாகவே இருக்கின்றார் என்றார். (ந-7)


## காணி விற்பனைக்கு உண்டு

**உரும்பிராய் வடக்கில் 13½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் ஒரு பரப்பின் விலை 1,500,000 (பதினைந்து இலட்சம் ரூபாய்)
- சரஸ்வதி சனசமூக நிலையம் அருகாமை குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- செம்மண், நன்னீர் ஊற்று நிலப்பரப்பு 20 அடிப் பாதை.
- உரும்பிராய் இந்துக் கல்லூரி 1 Km தூரம்.
- உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயில் 1½ Km தூரம்.
- தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு

**077 038 5455 / 077 498 3354**

(3795)


## மோடியை...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அழைப்பினை ஏற்று பிரதமர் மோடி மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்து 6 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருந்து பல்வேறு நிகழ்வுகளில் அவர் பங்கேற்கவுள்ளார்.

இவ்விஜயத்தின் போது பிரதமர் நரேந்திர மோடி; ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோருடன் இருதரப்புப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடவுள்ளார்.

தவிர, அநுராதபுரத்திற்குச் சென்று ஸ்ரீ மகா போதியை வழிபடவுள்ளார். அவர் திருகோணமலையில் சூரிய சக்தி மின் திட்டத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்திய அரசின் உதவியுடன் இலங்கையில் முன்னெடுக்கப்படும் சில அபிவிருத்தித் திட்டங்களையும் இந்தியப் பிரதமர் மக்கள் பயன்பாட்டிற்காகக் கையளிக்கவுள்ளார்.

இவ்விஜயத்தின் போது இரு நாடுகளுக்குமிடையே பல தரப்பட்ட ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படும்.

இந்தியப் பிரதமருடன் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர், வெளியுறவுச் செயலாளர், இந்திய அரசின் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளும் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிராமிய வைத்தியசாலைகளிலும் விசேட வைத்தியர்களின் சேவை

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

கிராமிய வைத்தியசாலைகளிலும் விசேட வைத்தியர்களின் சேவையை விரிவுபடுத் துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக சுகாதார பிரதி யமைச்சர் ஹங்சக விஜயமுனி தெரி வித்தார்.

தற்போது ஆதார வைத்தியசாலை கள் அல்லது அவற்றுக்கு அடுத்த தரத் திலான வைத்திய சாலைகளில் மாத் திரமே விசேட வைத்தியர்களின் சேவை காணப்படுகிறது.

இதன் காரணமாக கிராமப் புற மக்களுக்கு விசேட வைத்தியர்களின் சேவையை இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கு இயலாமல் போயுள் ளது.

எனவே முன்னோடி வேலைத் திட்ட மாக கண்டி மாவட்டத்தின் 6 வைத் தியசாலைகளில் அடுத்த மாதம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

கிராமிய வைத்தியசாலைகளில் வாரத்திற்கு ஒருநாள் விசேட வைத்தி யர்களின் சேவையை பெற்றுக் கொடு க்க இதனூடாக எதிர்பார்க்கப்படு கிறது.

இதற்காக வைத்தியர்கள் தாமாகவே விருப்பத்துடன் முன் வந்துள்ளனர்.

கிராமிய வைத்தியசாலைகளில் இருந்து நகர வைத்தியசாலைகளுக்கு வருகை தரும் நோயாளர்கள் எதிர் கொள்ளும் சிரமங்களை குறைப்பதே இதன் நோக்கமாகும் என அவர் தெரி வித்தார். (நி-8)

# 83 வீதமான உயிரிழப்புகள் தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன

## சுகாதார அமைச்சர் அதிர்ச்சித் தகவல்



(கொழும்பு)

நாட்டில் ஆண்டுதோறும் நிகழும் மொத்த இறப்புகளில் 83 வீதமானவை தொற்றா நோய்களால் ஏற்படுவதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்து ள்ளார்.

சுகாதாரத் தரவுகளின்படி, 60 வய துக்கு மேற்பட்டவர்களில் 35 வீதமா னோர் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட் டுள்ளார்.

அவர்களில், உயர் இரத்த அழுத்தம் இருப்பதை அறியாமல் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 60,000 பேர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அவர்களில் 4,000 பேர் ஆண்டுதோறும் இறக்கின்றனர் அல் லது அங்கவீனமடைகிறார்கள்.

மேலும், நாட்டின் வயது வந்தோரில் 20 வீதமானோர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 41 வீதமானோர் சிகிச்சை பெறுவ தில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள் ளார். (நி-8)

# "கல்விக் கலசம்" அமரர். திலகவதி பெரியதம்பி

ஓய்வுபெற்ற முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் அமரர். திருமதி. திலகவதி பெரியதம்பி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.



தமிழ் ஈழமாதா என்று புறந் தந்த இன்கலைக்கோயில் அமரர். பெரிய தம்பி அம்மா அவர்கள். புகழோடு தோன்றிய அதியற்புத ஆத்மா சிருஷ்டி. தெய்வீகப் பண்பு களுக்கு இலக்கணமாகவும் இலக் கியமாகவும் அமைந்து மனித உருவிலே நடமாடிய பெருந்தகை.

அமரருடைய தரிசனத்தால் கூர் ப்பு அடையாத கல்விப்புலங்களே இல்லையென்ற பொதுமையாக்கம் மிகையானது அல்ல. அவருடைய ஸ்பரிசத்தால் தூண்டப்பட்டுத் துல ங்கி நிற்கும் சமூக நிறுவனங்கள், வீசிக் கொண்டிருக்கும் ஒளிக்கீற் றுக்கள் அன்னாரின் சேவை நலனை கோடி காட்டுகின்றன.

அரம்போலும் அறிவுக்கூர்மை, பாடறிந்தொழுகும் பண்புநலன், அன்பும், இனிமையும், எளிமை யும் பெண்மையும் குடிகொண்ட ஆத்மராகம், இல்லையென்னாது எவருக்கும் இயலாதென்னாது இன்முகத்தோடு உதவும் பெருந் தன்மை, ஒட்டுமொத்தமாகச்சேவைக் கென்றே தன்னை வரித்துக் கொண்ட வள்ளன்மை இவைய னைத்தையும் கொண்ட மீயுயர் பெண்மணியாக அன்னாரை அடை யாளமிடலாம்.

அமரர். பெரியதம்பி அம்மா அவர்கள் தான் கல்வி கற்ற மெத டிஸ்த மகளிர் கல்லூரியை உண் மைக் கமலத்தில் வைத்துப் பூசித்த ஒருவர். பெண் கல்வி முளைவிட்டு வளர்ச்சியடைந்த காலப்பகுதியில் கல்விகற்று விவசாய விஞ்ஞான பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுத் தனது கல்லூரிக்குப் பெருமையும் புகழும் தேடிக்கொடுத்தவர். அக் காலத்திற் கல்விகற்ற பெண்மணிக ளுக்கு வழிகாட்டியவர். பல்கலைக் கழகக் கல்வியை நிறைவுசெய்த பின் கல்விப்புலத்திலே ஆசிரியராக அடிபதித்த அமரர். தி. பெரியதம்பி கல்வி நிர்வாகக் கட்டமைப்பில் பல் வேறு பதவிகளையேற்று இறுதி யாக மாகாணக் கல்விப்பணிப்பாள ராக உச்சம் தொட்டவர். எத்தகைய உயர் பதவியிலிருந்த வேளையி லும் மாணவர் கல்வி வளர்ச்சியி னையே தனது உயரிய குறிக் கோளாகக் கொண்டவர். அன்னாரி டம் நிதியுதவி பெற்றுப் பல மாண வர்கள் கல்வியிலும் இணைபாடச் செயற்பாடுகளிலும் உச்சம் தொட் டதை எவராலும் மறுக்க முடி யாது. அமரர். தி. பெரியதம்பி அம்மா அறிவு ஜீவிகளில் அதியற்புதமான வர் என்பதில் எவ்வித ஐயமு மில்லை.

பாரதி நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவ கனாய் கண்டது போல அமரரைப் பல்வேறு நிலைகளிலே கண்டு புளகாங்கிதம் அடைகின்றோம்.

சென்ற இடமெல்லாம் கடமைக் கண்ணோடு கல்விப்பணியாற்றிய சீர்புத்த செம்மல், அதியற்புத கல்விச் சிந்தனைச் சொரூபி ஈச னோடு அத்துவிதமாகிவிட்டது. அன்னையின் ஆத்மா சாந்தியடைக.

வை. செல்வராசா,
ஓய்வுநிலை மாகாணக்கல்விப்பணிப்பாளர், கரவெட்டி.

# இராசிபலன்

31.03.2025
பங்குனி 17, திங்கட்கிழமை
துதியை பிற்பகல் 12.32 மணிவரை.
அச்சுவினி பிற்பகல் 5.04 மணிவரை

சுபநேரம் 12.12-1.42 மணிவரை
இராகுகாலம் 7.42- 9.12 மணிவரை
ரமழான் பண்டிகை
செல்லப்பா சுவாமிகள் குருபூசை

சந்திராஷ்டமம்.
உத்தரம், அத்தம்

வளவன்




எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கனவுப் பலிதமுண்டு, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.




பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.




உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், தொட்ட காரியங்கள் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.




தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, உடல் நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.




குடும்பத்தினரிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




பொதுவாழ்வில் புகழ் கூடும், இறைவழிபாட்டால் ஆர்வம் கூடும், செய்தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.




கேளிக்கைகள் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாடு மகத்துவம் தரும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தனவரவுகள் இல்லம் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்களில் தாராளம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

உன்னை எச்சரிப்பவனே உண்மையான நண்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளில் குப்பைகளை வீசினால் சட்டம் பாயும்!

(யாழ்ப்பாணம்)

**வீதிகளில் முறையற்ற வகையில் குப்பைகளை வீசுபவர்கள் அடையாளம் காணப்பட்டால் அந்நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றுச்சூழல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

வடக்கு மாகாண ஆளுநருக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது உள்ளூராட்சி மன்றங்கள் சுற்றுச்சூழலை சுத்தமாக பேணுவது தொடர்பான விடயம் ஆராயப்பட்டது.

குறிப்பாக செம்மணி வல்லைவெளி, கைதடி-கோப்பாய் வீதிகளில் கோழிக்கழிவுகள் முறையற்ற விதத்தில் வீசப்படுவது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இதேபோன்று பல்வேறு இடங்களிலும் குப்பைகள் கொட்டுவது தொடர்பிலும் தெரியப்படுத்தப்பட்டது.

இவ்வாறு குப்பைகளை வீசுபவர்களை அடையாளப்படுத்தி தந்தால் அந் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இதன்போது சுற்றுச்சூழல் பொலிஸார் தெரிவித்தனர். (6-8)

# திருமறைக்கலாமன்ற ஸ்தாபகரின் நினைவு தினமும் நினைவுப் பேருரையும்



(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகர் அமரர். அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் நான்காவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இல. 286, பிரதான வீதி, யாழில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் திருமறைக் கலாமன்றத்தால் நினைவுப் பேருரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், நினைவுப்பேருரையை "அழகியல் ஓர் ஆன்மீக நோக்கு நிலை" என்னும் பொருளில் யாழ்.பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியரும் நுண்கலைத் துறை முன்னாள் தலைவருமான கலாநிதி. திருமதி ஏ.என்.கிருஷ்ணவேணி நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார். (6-8)

# விளையாடிக் கொண்டிருந்த சிறுமியின் சங்கிலி அறுப்பு

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா, நகரசபைப் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி ஒருவரின் தங்கச் சங்கிலியை இரு பெண்கள் அறுத்துச் சென்றுள்ள சம்பவமொன்று இடம்பெற்றது என வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா, பூங்கா வீதியில் அமைந்துள்ள நகரசபை பூங்காவில் சிறுமி ஒருவர் விளையாடிக் கொண்டிருந்துள்ளார். இதன்போது அச் சிறுமியின் அருகில் சென்ற இரு பெண்கள் அச் சிறுமியுடன் கதைப்பது போன்று கதைத்து விட்டு சிறுமி அணிந்திருந்த தங்கச்சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6-8-250)

# கஞ்சா கலந்த மாவாவுடன் யாழில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப்பகுதியில் 9 கிலோ 300 கிராம் கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி வழிகாட்டலில் உதவி பொலிஸ் பரிசோதகர் நந்தகுமார் குழுவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது கைதான 40 வயது மதிக்கத்தக்க இருவரையும் யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (6-8-33)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 500 | 400 | 600 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 550 | 500 | 400 | 450 |
| தக்காளி | 300 | 200 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 200 |
| கோவா | 300 | 250 | 250 | 400 |
| கரட் | 800 | 650 | 800 | 800 |
| பூசணி | 200 | 150 | 150 | 200 |
| புடோல் | 150 | 200 | 150-200 | 300 |
| வாழைக்காய் | 150 | 100 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 160 | 180 |
| பாகற்காய் | 400 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 280 | 200 | 250 |
| பயற்றங்காய் | 400 | 500 | 300 | 500 |
| லீக்ஸ் | 350 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 250 | 250 | 300 |
| கறிமிளகாய் | 800 | 500 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 2000 | 2500 | 2000 | 3000 |
| போஞ்சி | 400 | 500 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 400 | 250 | 500 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 150 | 150 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250-300 | 150 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 400 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 60 | 200 |

# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் மஹோற்சவப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவப் பெருவிழா-2025 இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து மஹோற்சவங்கள் இடம்பெற்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை இரதோற்சவமும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு புவனசுரபி தீர்த்தவாரியில் தீர்த்தோற்சவமும் 12 ஆம் திகதி சனிக் கிழமை மாலை 6 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய ஆதீனகர்த்தா சிவசுப்பிரமணியம் சிவகணேஷ் தெரிவித்துள்ளார். (நி-8)

## மீனவர்கள் விவகாரம்

# இருநாட்டு அமைச்சு, அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை விரைவில்-கடற்றொழில் அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை, இந்திய மீனவர்களுக்கிடையிலான அமைச்சு மற்றும் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் வெகுவிரைவில் நடைபெறவுள்ளது என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரத்தின் அனைத்து விசைப்படகு சங்க செயலாளர் சகாயம் தலைமையிலான இந்திய மீனவ பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் அமைச்சரை யாழில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடலில் ஈடுப்பட்டனர்.

இச் சந்திப்பு தொடர்பில் அமைச்சர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்பதை இந்திய மீனவர்கள் உணர்ந்தனர் என்பதை அறியமுடிந்தது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கும் இது தொடர்பில் அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய அமைச்சு மற்றும் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் எதிர்வரும் நாட்களில் நடைபெறும் எனவும் அமைச்சர் விடுத்துள்ள, அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர் சடையம்மா சுவாமிகளுக்கு 170 ஆண்டுகளின் பின் திருக்கோவில்



(ஈழத்தின் முதல் பெண் சித்தர் சடையம்மாவுக்கு திருநெல்வேலி கிழக்கில் திருக்கோவில் அமைக்கப்பட்டு திருவுருவ சிலை பிரதிஷ்டை இன்று 31.03.2025 திங்கட்கிழமை நடைபெறுகிறது. இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.)

திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா இன்று (31.03.2025) திங்கட்கிழமை காலை 9.15 மணி முதல் 10.40 வரையான சுபமுகூர்த்த நன்னாளில் நடைபெறவுள்ளது. இதன் சிறப்பம்சமாக ஈழத்தின் முதல் பெண் சித்தர் யாழ்ப்பாணத்து நல்லூர் சடையம்மா சுவாமிகளுக்கு புதிதாக ஆலயம் அமைக்கப்பட்டு அவரது திருவுருவச்சிலை பிரதிஷ்டையும் இடம்பெற உள்ளது. சித்தர் சடையம்மா சுவாமிகள் அவதரித்த ஊரில் 170 ஆண்டுகளின் பின்னர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும்.


சடையம்மா சுவாமிகள். 19.08.1865 ஆம் ஆண்டு ரோகினி நட்சத்திரத்திலே வீரகத்திப்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளாக முத்துப்பிள்ளை எனும் பிள்ளைத் திருநாமத்துடன் அவதரித்தார். தனது 11 ஆவது வயதிலே நந்திகோத்திரத்தை சேர்ந்த கதிரேசு என்பவரை திருமணம் செய்து இல்லற வாழ்வை ஆரம்பித்தார். இரு பெண் பிள்ளைகளின் தாயாக விளங்கிய இவர் அப்பர் சுவாமிகளது வாக்கிற்கமைய "தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" என்பதற்கமைய சரியைத் தொண்டு புரிந்து இறையாசி பெற்று வரும்நாளில் இமைப்பொழுதும் இறைநாமத்துடன் இல்லறத்தில் துறவற நிலையை பேணி காதலாகி கசிந்து கண்ணீர் மல்க ஆலயந்தானும் அரன் எனத்தொழுமே என்பதற்கமைய பக்தியோகி ஆகிவரும் நாளில் இவரது கணவர் நோய் வாய்ப்பட, அது நீங்க நல்லூரான் வாசல் சென்று அவனையே தஞ்சம் எனக் கொண்டு அங்கேயே தங்கியிருந்து சரியை தொண்டாற்றினார்.

இக்காலத்திலே காசி, இராமேஸ்வரம், முதலாய தென்னிந்திய திருத்தலங்களுக்கு சென்று வழிபாடு இயற்றி கங்கை, காவேரி, சரஸ்வதி ஆகிய திரிவேணி சங்கமத்திலே புனித தீர்த்தமாடி ஆன்மீக அறிவு கைவரப் பெற்று பதிஞானம், பசு ஞானம் கைவரப் பெற்று அது முதிரப்பெற்று ஞானயோகியானார். மெல்ல மெல்ல இல்லற வாழ்வை நீக்கி துறவற வாழ்வை ஏற்கும் நாளில் வாலையம்மனின் அருட்பார்வையால் யோகம் கைவரப் பெற்றார்.

இந்நிலையில் தன் மாங்கல்யத்தை கழற்றி கணவனிடம் கையளித்து குடும்ப வாழ்வைத் துறந்து மக்கள் பணி ஆற்றத் தலைப்பட்டு சமூக நோக்கோடு நல்லூர் தேரடிமடம், கதிர்காம மடம், கீரிமலை மடம் முதலியவற்றை ஈழத்திலும் கடல் கடந்து திருச்செந்தூர் சென்று அங்கேயும் மடம் அமைத்து பசித்தோர் முகம் பார்த்து அன்ன தானப் பணி புரிந்தார். இவர் மனதால் நினைப்பதை அடியவர் தாமாகவே வழங்கி பேருதவி புரிந்தனர். பொன்னும் பொருளும் வாரி வழங்கினர். மடங்கள் அமைத்து பணி புரிந்தார். சுவாமி இராமகிருஷ்ணரின் பொன்மொழிக்கேற்ப "ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணலாம்" என்பதை மெய்ப்பித்தார் வள்ளலார் சுவாமிகளின் திருஞானக் கோட்டம்போல் உணவும் உறையுளும் வழங்கி உடைமாந்தரை உய்வித்தார். நாடிவரும் அடியவர் தம் மனக் கவலைகளை நீக்கினார்.

இவர் தனது சித்தத்தை சிவன்பால் வைக்க ஏற்ற புண்ணிய இடமாக கீரிமலை எனும் நகுலேஸ்வரத்தை தெரிவு செய்து அங்கே மடம் அமைத்து அங்கே தங்கி இருந்து பணியாற்றத் தொடங்கினார். ஆன்மீக உயர் இடமாகிய இவ்விடத்திலே கடல் அலை மோதும் பிதிர்க்கடன் நிறைவேற்றும் இடம் என்பன ஒருங்கே அமைந்த சிறிய மலையிலே தங்கி சித்தர்கள், ஞானிகளின் ஆன்மீக தேடலுக்குரிய இடமாக்கினர். நந்தவனம் அமைத்தார். இப்பணியை நல்லூர் ஆலயம், நல்லூர் சட்டநாதர் ஆலயம், திருநெல்வேலி வாலையம்மன் ஆலயம் போன்றவற்றிலும் மேற்கொண்டார். இத்தனை சிறப்புமிக்க இவர் 1936ஆம் ஆண்டு சுக்கிரவார அனுச நட்சத்திரமன்று தான் ஏற்கனவே கூறியபடி உச்சி வீங்கி தலை பிளந்து சமாதியானார். இவரின் சமாதியானது யோகர் சுவாமிகளின் தலைமையிலே கீரிமலையிலே கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு நிலத்தின் கீழே உள்ள நிலக்கீழ் அறையில் சமாதி வைக்கப்பட்டது. இவரது சடையின் ஒரு பகுதி எடுக்கப்பட்டு கதிர்காமம், திருச்செந்தூர் ஆகிய இடங்களில் சமாதி வைக்கப்பட்டது.

இவரின் சமாதிக்கு மேலாக கிழக்கு திசை நோக்கி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. வடக்கு நோக்கி அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இவரது சமாதிக்கு அருகே குழந்தைவேல் சுவாமிகளது சமாதி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள இவரது சமாதியானது எவ்வித சேதமின்றி அப்படியே காட்சியளிக்கிறது. இவரது சமாதியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட திருவுருவ சிலைகள் பாதுகாப்பாக ஓரிடத்திலே இருப்பதாக அறிய முடிகின்றது. இவரது மடங்கள் இயங்க முடியாமலும், பெயர் மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டுமுள்ளன. இது சைவத்தமிழ் உலகுக்குப் பெரும் இழுக்கானது. இந்நிலையில் நல்லூர் சடையம்மா மடத்திலே பணியாற்றிய பௌராணிகர் சி. தம்பிஐயா அவர்களால் 1975ஆம் ஆண்டளவில் அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்திலே கொட்டகை அமைத்து அவரின் பணிகளை ஆற்றி 63 மெய்யடியார்களதும் 9 தொகை அடியார்களதும் குருபூசைகளை நடத்தி வந்தார். இக்கைங்கரியம் கைகூடவே வளர்ச்சியடைந்து 2000ஆம் ஆண்டு இந்த மடம் விஸ்தரிக்கப்பட்டு 63 அடி நீள மடம் அமைத்து சின்னத் தலைமை வாத்தியார் எனப்பட்ட ச. நடராசா வாத்தியாரால் திறந்து வைக்கப்பட்டது.



கலாநிதி
சின்னத்தம்பி பத்மராஜா

நாளொரு வண்ணமும் இப்பணி வளர்ச்சியுற்று 2025 ஆம் ஆண்டிலே லிங்கம் அறக்கட்டளை ஸ்தாபகரது பேருதவியால் முதன் முதலில் சடையம்மாவிற்கு ஆலயம் அமைக்கப்பட்டு சடையம்மா அவர்களது சமாதி மண் எடுத்துவரப்பட்டு அதன்மீது சடையம்மா சுவாமிகளின் கருங்கல்லினாலான திருவுருவச் சிலையையும் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது. இவரது வாழ்க்கை வரலாறு உள்ளடக்கிய சமாதிப்பாக்களை சரவணையைச் சேர்ந்த ஆ. தில்லைநாதபிள்ளை என்பவர் 1957ஆம் ஆண்டிலே பண்டிதர் சோ. சபாபதிப்பிள்ளை அவர்களது முகவுரையுடன் திருச்செந்தூர் ஆ. நெல்லை வடிவேற்பிள்ளை அவர்களின் அணிந்துரையுடனான 60 பாக்கள் கொண்ட சிறு நூலை வெளியிட்டுள்ளார். ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களும் ஈழத்து சித்தரில் ஒருவராக சடையம்மாவை குறிப்பிட்டு நூல் எழுதி உள்ளார்.

19 ஆம் நூற்றாண்டிலே ஒரு துணிச்சலான பெண் ஆளுமையாக ஈழம் மற்றும் பாரதம் ஆகிய இரு வேறு நாடுகளுக்கும் சென்று சமய. சமூகப் பணியை ஒரு பெண் தொடர்வது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. அதனை நிதர்சனமாக்கி தனக்குக் கீழே ஒரு மடாதீனத்தையும் காரியக் கமிட்டியையும் நிறுவி பல்வேறு இடங்களிலும் நிறுவிய மடங்களை ஒருங்கிணைத்து பணியாற்றிய ஒரு பேராளுமையாக சித்துக்கள் கைவரப்பெற்ற பெண்ணாக ஆன்மீகப் பணி புரிந்தமை ஆய்வுப் புலத்திலே மதிப்பீடு செய்யப்படவேண்டிய ஒன்றாகும். ஈழத்துக்கும் நல்லூருக்கும் பெருமை சேர்ந்த ஒரு பெண்ணாக சைவத் தமிழ் உலகு ஏற்று அவரின் பணியை வெளிக்கொணர்ந்து அவர் வழி பயணிப்பது காலத்தின் தேவை எனலாம்.

# முட்டையின் விலை அதிகரிக்கும்

## முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

வீழ்ச்சியடைந்து வரும் முட்டையின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கா விட்டால், எதிர்காலத்தில் முட்டை ஒன்றின் விலை 50 ரூபாயாக அதிகரிக்கப்படுமென அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சந்தையில் முட்டை விலை குறைந்துள்ளதன் காரணமாக முட்டை உற்பத்தியாளர்கள் கோழிகளை இறைச்சிக்காக விற்பனை செய்வதாக அந்த சங்கத்தின் தலைவர் அன்டன் நிஷாந்த அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

சந்தையில் முட்டையின் விலை வேகமாகக் குறைவடைந்து வருகிறது.

கடந்த காலங்களில் 60 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்பட்ட முட்டை தற்போது 25 முதல் 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

முட்டை உற்பத்தியாளர்கள் பலர் கோழிகளை இறைச்சிக்காக விற்பனை செய்வதை நாடியுள்ளனர்.

இந்தநிலையில், முட்டைக்கான நியாயமான விலையை நிர்ணயம் செய்து முட்டை உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அன்டன் நிஷாந்த அப்புஹாமி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-8)


## பெயர் மாற்ற அறிவித்தல்


பாடசாலை வீதி, காத்தார் சின்னக்குளம், வவுனியாவில் வசிக்கும் லிங்ககுரு சுசீலா எனும் பெயரை இன்று முதல் (31.03.2025) சுசிலாதேவி என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
லிங்ககுரு சுசிலாதேவி

(3790)


# பிரிவினையை ஏற்படுத்தி வாக்கு சேகரிக்கும் தேவை எமக்குக் கிடையாது

## நாமல் ராஜபக்ஷ



(கொழும்பு)

"மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி வாக்குச் சேகரிக்க வேண்டிய தேவை எமக்குக் கிடையாது" என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கரந்தெனிய பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்:

இதன்போது பொதுஜன பெரமுனவின் ஆட்சிக்காலத்தில் இந்த நாட்டில் பாரிய அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், இன்றும் எம்மிடம் வேலைத்திட்டங்கள் உள்ளன எனவும், அந்த வேலைத்திட்டங்களை முன்னிலைப்படுத்தியே தாம் மக்களிடம் வாக்குக் கேட்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் ஆசியாவின் ஆச்சரியம் என இலங்கையை மாற்றுவதே தமது கொள்கையாகும் எனவும், தமது கட்சியிலிருந்து விலகிச் சென்ற பலர் தற்போது மீண்டும் தம்முடன் இணைந்துள்ளனர் எனவும் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றி பெறும் எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மியன்மாரில் மருத்துவப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

### ஐ.நா.சபை எச்சரிக்கை



(பாங்கொங்)

மியன்மாரில் ஏற்பட்ட நில அதிர்வை அடுத்துக் காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மருத்துவ பொருட்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு ஏற்படும் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

மியன்மாரில் கடந்த வெள்ளிக்கிழமை 7.7 மெக்னிடியூட் அளவில் ஏற்பட்ட நில அதிர்வினால் 2000 இற்கும் மேற்பட்டோர் பலியானதுடன் 3,400 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் பலர் இடிபாடுகளில் சிக்கியுள்ளதுடன் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-8)



# மியன்மாரை உலுக்க

## உயிரிழப்பு பத்தாயிரத்தை

## அமெரிக்க புவியியல் ஆய்

(பாங்கொங்)

**மியன்மார் நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தைத் தாண்டும் அபாயம் இருப்பதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.**

மத்திய மியன்மாரில் சமீபத்தில் 7.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்நிலையில், சக்தி வாய்ந்த நிலநடுக்கத்திற்குப் பிறகும், நாடு 6 வலுவான பின்அதிர்வுகளால் பாதிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு மியன்மாரைத் தாக்கிய சக்திவாய்ந்த நிலநடுக்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே இராணுவ ஆட்சியால் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள மியான்மார் மக்கள், நிலநடுக்கத்தால் கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலநடுக்கம் மியன்மாரின் இரண்டாவது பெரிய நகரமான மண்டலேயிலும் கடுமையான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

நிலநடுக்கத்தின் போது மண்டலேயில் ஒரு பாலர் பாடசாலையின் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 12 குழந்தைகள் மற்றும் அவர்களின் ஆசிரியரின் உடல்களும் கண்டு பிடிக்கப்பட்டதை மீட்புப் பணியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேலும் சிலர் நிலநடுக்க அபா



யம் 
களுக்
வரு
டுள்
உத

# மன்னராட்சிக்கு ஆதரவாக போராட்டம் நேபாள முன்னாள் மன்னருக்கு அபராதம்



(காத்மாண்டு)

நேபாளத் தலைநகர் காத்மாண்டுவில் மன்னராட்சிக்கு ஆதரவான போராட்டங்களின் போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததற்காக, முன்னாள் மன்னர் ஞானேந்திர ஷாவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் 2008 ஆம் ஆண்டு பாராளுமன்ற அறிவிப்பின் மூலம் 240 ஆண்டுகால மன்னராட்சி முடிவுக்கு வந்தது. இதன் மூலம் 80 சதவீத இந்துக்களை கொண்ட நேபாளம் மன்னராட்சியில் இருந்து மதச்சார்பற்ற, கூட்டாட்சி ஜனநாயகக் குடியரசாக மாறியது.

இந்நிலையில், கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி குடியரசு தினத்தன்று முன்னாள் மன்னர் ஞானேந்திரா ஷா, பொது மக்களிடம் தனக்கு ஆதரவளித்து முடியாட்சியை மீட்டெடுக்குமாறு வேண்டுகோள் விடுத்து உரையாற்றினார்.

இதனையடுத்து முன்னாள் மன்னர் ஞானேந்திரா ஷாவின் ஆதரவாளர்கள் மன்னராட்சியை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று போராட்டங்களை நடத்தினர். பொலிஸார் போராட்டத்தை கட்டுக்குள் கொண்டுவர முயன்ற போது, போராட்டக்காரர்கள், வீடுகள் மற்றும் பல்வேறு கட்டடங்களுக்கு தீ வைத்தனர். இந்த வன்முறையில் 2 பேர் கொல்லப்பட்டனர். 110 பேருக்கு காயம் ஏற்பட்டது.

முன்னாள் மன்னர் ஞானேந்திர ஷாவின் அழைப்பின் பேரில் நடைபெற்ற போராட்டத்தில் பொதுச்சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டது. இதனையடுத்து காத்மாண்டு நகர மேயர் முன்னாள் மன்னருக்கு 7,93,000 ரூபாய் (நேபாள ரூபாய்) அபராதம் விதித்து உத்தரவிட்டார். (நி-8)

# உப்பு நீ

## கரையும் பிள

### ஜப்பான் விஞ்ஞானிகள்

(டோக்கியோ)

சுற்றுச் சூழல் மாசடைவதை தடுப்பதற்காகவும் உப்புத் 
தண்
கரை
க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ுக்கிய நிலநடுக்கம்!

## ...ைதை தாண்டும் அபாயம்!


## ...ஆய்வு மையம் எச்சரிக்கை

...ின்
...யம்
...யம்

...டுமை
...தியுள்

...மண்ட
...லயின்
...ந்ததில்
...அவர்க
...களும்
...பணி
...யுள்ள

... அபா




யம் காரணமாக மருத்துவமனை களுக்கு வெளியே சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. மீட்புப் பணிகளில் உதவுவதற்காக சீன பேரிடர் நிவாரணக் குழுவொன்று மியன்மாருக்கு வந்துள்ளது.

இந்தியா, இந்தோனே சியா, மலேசியா, அவுஸ் திரேலியா, நியூசிலாந்து மற்றும் வியட்நாம் உள் ளிட்ட பல நாடுகள் மியன் மாரை ஆதரிக்க முன் வந்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-8)

# வீடொன்றில் மோதிய சிறிய ரக விமானம்

## பயணித்த அனைவரும் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் மின சோட்டா மாநிலத்தில் புரூக் ளின் பார்க் நகரப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக் கிழமை சிறிய ரக விமானம் மோதி வீடொன்று தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்த சம்பவத்தில் விமா னத்தில் பயணித்த எவரும் உயிர் பிழைக்கவில்லை என அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

விமானம் மோதி வீடு தீப்பற்றி எரிந்து முற்றிலும் நாசமாகியுள்ளதோடு, அரு கிலுள்ள வீடுகளுக்கும் சிறிய சேதம் ஏற்பட்டுள்ளது. ஆனால் வீட்டிலிருந்த எவ ருக்கும் காயம் ஏற்பட வில்லை என நகர தக வல் தொடர்பு முகாமை யாளர் தெரிவித்துள் ளார்.

விமானத்தில் பயணித்த எவரும் உயிர் பிழைக்க வில்லை, இருப்பினும் எத் தனை பேர் அதில் பயணித் தனர் என்பது உடனடியாகத் தெரியவில்லை என நகர தீயணைப்புத் திணைக் களத்தின் தலைவர் தெரிவி த்துள்ளார்.

SOCATA TBM7 என அடையாளம் கண்டுள்ள இந்த விமானத்தில் அதிக பட்சமாக ஏழு பேர் பய ணிக்க முடியும் என தகவல் வெளியாகியுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது. (நி-8)

# ...ு நீரில்
# ...் பிளாஸ்ரிக்

## ...ஞானிகள் கண்டுபிடிப்பு

...வதை
...ட்புத்

தண்ணீரில் உடனடியாக கரையும் புதிய பிளாஸ்ரி க்கை ஜப்பான் விஞ்ஞானி கள் கண்டுபிடித்துள்ள னர்.




ஜப்பானில் உள்ள எமர்ஜென்ட் மேட்டர் சயின்ஸ் ஆய்வு நிலை யத்தின் விஞ்ஞானிகள் இந்த புதிய வகை பிளாஸ்ரிக்கை உருவாக்கி யுள்ளனர்.

இந்தப் பிளாஸ்ரி க்கை பயன்படுத்தும் போது உறுதியானதாக இருக்குமெனவும், உப்புத் தண்ணீரில் போட்டவுடன் கரைந்து விடும் தன்மை கொண்டது எனவும் ஆரா ய்ச்சி குழுவுக்கு தலைமை வகித்த விஞ்ஞானி டகுசோ அய்தா தெரிவித்துள்ளார்.

குறித்த பிளாஸ்ரிக் உப்புத் தண்ணீரில் கரை ந்ததும், அது மக்கும் தன்மையை பெறுவதால் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்குமெனவும் தெரி விக்கப்படுகின்றது. (நி-8)

# இடிபாடுகளிடையே கேட்கும் அவலக்குரல்கள்

## மியன்மாரின் மீட்புப் பணியாளர் தெரிவிப்பு



(பாங்கொங்)

மியன்மாரின் மண்டலா யில் கட்டட இடிபாடுகளிற் குள் சிக்குண்டவர்கள் தங்களை காப்பாற்றுமாறு இன்னமும் மன்றாடிக் கொண்டிருக்கின்றனர் என சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

உயர்மாடிக்கட்டடமொ ன்று இடிந்து விழுந்ததில் இடிபாடுகளிற்குள் சிக்குண்ட ஏழுபேரை காப்பாற்றுவதற் கான முயற்சிகளில் மீட்பு பணியாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இந்த கட்டட இடிபாடுகளிற்குள் இருந்து 50 பேரை மீட்ட தாக ஒருவர் தெரிவித்தார்.


நாங்கள் இடிபாடுகளி ற்குள் சிக்குண்டுள்ள ஏனையவர்களை காப்பாற்ற முயல்கின்றோம், ஆனால் அதற்கு பாரிய இயந்தி ரங்கள் தேவை. அவர்கள் இன்னமும் அலறுகின்றனர் அவர்களின் அவலக்குரல் களை கேட்க முடிகின்றது ஆனால் அவர்கள் எங்கிருக் கின்றார்கள் என்பதை கண்டுபிடிக்கமுடியவில்லை, என மீட்பு பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

பெரும் இயந்திரங்கள் இருந்தால் இடிபாடுகளை அகற்றி அவர்களை காப் பாற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈகைத் திருநாளான நோன்புப் பெருநாள்



கலாபூஷணம் பரீட் இக்பால் - யாழ்ப்பாணம்.

ஒவ்வொரு முஸ்லிமும் நோன்பு பெருநாள் கொண்டாடத் தயாராகும் போது பித்ரா (தர்மம்) கொடுப்பதைக் கொண்டே தயாராக வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நோன்புப் பெருநாள் தர்மம் நோன்பின் போது ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும் ஏழை, எளியவர்கள் பெருநாள் தினத்தில் பசி, பட்டினியோடு இருக்கக் கூடாது என்ற நோக்கங்களின் அடிப்படையிலும் கடமையாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவமானதாகவும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர். நாம் பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக் கலந்தே வாழ்கிறோம். எனவே அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்கள் ஆவேசப்படுகின்ற, ஆத்திரப்படுகின்ற சூழ்நிலைகளை நாம் உருவாக்கக் கூடாது.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்துகொள்ளக் கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது.

வறிய மக்களின் துயர் துடைக்கும் பித்ரா என்ற கடமையுடன் பெருநாள் தொடங்குவதன் காரணமாகவே பித்ர் என்ற வார்த்தையுடன் சேர்ந்து ஈதுல் பித்ர் என்று இப்பெருநாள் அழைக்கப்படுகின்றது. பெருநாள் தினத்தில் இரவு, பகல் இரண்டு வேளைகளுக்கு தனக்கும் தனது பராமரிப்பிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் போதுமான அத்தியாவசிய வாழ்க்கை வசதிகளையுடைய ஒவ்வொரு முஸ்லிமும் இத்தகைய வசதிகள் அற்ற அல்லது வசதிகள் குறைந்த ஏழைகளுக்கு கட்டாயமாகக் கொடுப்பதற்குரிய நன்கொடையே ஸகாதுல் பித்ர் எனப்படும்.

பெருநாள் தினத்தன்று சகல முஸ்லிம்களும் சந்தோஷமாக உண்டு மகிழ வேண்டும், எவரும் பசியுடன் இருக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கு முதலாவதாகவும், பித்ராவை வழங்கும் ஒவ்வொருவரும் ரமழான் மாதத்தில் விட்ட பிழைகளுக்குப் பரிகாரமாகவும் ஸகாதுல் பித்ர் இருப்பதனால் நோன்பாளிகள் பரிசுத்தவான்களாக மாறுவதனால் தனியார்கள் நன்மை பெறுவது இரண்டாவது நோக்கமாகவும் திகழ்கின்றது.

ஒவ்வொரு முஸ்லிமின் செயல்கள் மற்ற சகோதர முஸ்லிம்களின் சுகதுக்கங்களில் பங்குபற்றக் கூடிய விதத்தில் அமைந்திருக்க வேண்டும். இந்த உண்மையை ஸகாதுல் பித்ர் அமைப்பு முறையிலும் காணக் கூடியதாக உள்ளது.

பெருநாள் தினத்தில் நாங்கள் எல்லோரும் அதிகாலையில் குளித்து, புத்தாடைகள் அணிந்து, நறுமணம் பூசி, அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இதேபோன்று அன்றைய தினத்தில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு.

இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களாகிய நாம் எமது பெருநாளின் சிறப்புக்களை மாற்று மத இனங்களுடன் பகிர்ந்து கொள்வதில் எந்தத் தவறுமில்லை. அவ்வாறு நாம் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் போதுதான் இந்த நாட்டில் இன நல்லுறவைக் கட்டியெழுப்ப முடியும். ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் தொழில் நடவடிக்கைகளும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும். இலங்கையில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களாகிய நாம் பெரும்பான்மையினருடனும் ஏனைய சிறுபான்மை சமூகங்களுடனும் பிரச்சினைகளிலிருந்து நீங்கி சமாதானமும் சகவாழ்வும் இனங்களுக்கிடையே சகிப்புத் தன்மையும் புரிந்துணர்வும் ஏற்படவும் அல்லாஹ் அருள் புரிவானாக.

நோன்புப் பெருநாளை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.



## இன்று ஒரு தகவல் 346

தென்கச்சி கோ. சுவாமிநாதன்



# விருந்து

பந்திக்கு முந்துகின்ற ஆசாமிகள் நம்மிலே பல பேர் உண்டு. அப்படி முந்துவது கூடத் தவறு இல்லை. ஆனால் அப்படி ஒரு விருந்திலே முதல் ஆளாக உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு வெளியிலே வரும் போது என்ன பெரிய விருந்து வைத்துவிட்டான். சாம்பாரிலே உப்பு இல்லை. ரசத்திலே காரம் இல்லை என்று குறைசொல்லிக்கொண்டே வருவது இருக்குப் பாருங்கள் அது சரி இல்லை. நாகரிகமுமில்லை.

திருமணப்பத்திரிகையிலே என்னென்ன போட்டிருக்கு? என் பெண்ணிற்கும் இன்னார் பையனுக்கும் திருமணம். எல்லோரும் குடும்பத்தோடு வந்து மணமக்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்று தான் போட்டிருக்கும். குடும்பத்தோடு வந்து விருந்து சாப்பிட்டு சாப்பாடு எப்படி இருக்கு என்று அபிப்பிராயம் சொல்லிவிட்டு போங்கள் என்றா போட்டிருக்கும்.

ஒருவருடைய வீட்டு விஷேசத்திற்குப் போயிருக்கின்றோம் என்றால் எவ்வளவோ அசௌகரியங்கள் நமக்கு ஏற்படலாம். ஏராளமான கூட்டம் வந்திருக்கும். எல்லோரையும் வந்து அவர்கள் தனியாக கவனித்துக் கொண்டிருக்க முடியாது. நாம் தான் சமாளித்துக் கொண்டு வாழ்த்த வேண்டியவர்களை வாழ்த்திவிட்டு வந்து சேரவேண்டும். அதை விட்டு விட்டு பத்திரிகை கொடுத்தார்கள் என்று போனேன் சேர். கவனிப்பே சரியில்லை என்று புலம்பிக்கொண்டிருக்கக் கூடாது.

ஒரு விருந்துக்குப் போனால் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கூட அனுபவசாலிகள் சிலர் சொல்லியிருக்கின்றார்கள். இந்தக் காலத்திலே திருமணம், பிறந்தநாள் அது இது என்று நிறைய விருந்துகள் நடக்கும். அது எல்லாம் எதற்காக? மனித உறவுகளை வளர்ப்பதற்காகத் தான். ஒரு விருந்திற்குப் போனால் அமைதியாக பொறுமையாகப் போய் உட்கார வேண்டும். அடித்துப்பிடித்து முதல் போய் உட்கார வேண்டும் என்று நினைக்கக் கூடாது. முதல் பந்தி நடந்து கொண்டிருந்தால் அது முடிந்து இலை எடுத்துச் சுத்தம் செய்த பின்னர் போய் உட்காருவதே நாகரிகம். இலை எடுப்பதற்கு முன்னரே அங்கே போய் உட்கார்ந்தால் நன்றாக இருக்காது. சாப்பிட்டு விட்டு உட்கார்ந்திருக்கின்றீர்களா? சாப்பிடுவதற்கு உட்கார்ந்து இருக்கிறீர்களா? என்று பார்ப்பவர்களுக்கு சந்தேகம் வரும்.

அதே மாதிரி இலையிலே எல்லா உணவும் பரிமாறியதன் பின்னரே சாப்பிட ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு உணவாக வைக்க வைக்க வயிற்றினுள்ளே தள்ளிக் கொண்டிருந்தால் எதை வைத்தோம் எதை வைக்கவில்லை என்று பரிமாறியவரே குழம்பிவிடுவார். ஏன் என்றால் எப்போது பார்தாலும் இலை காலியாகத் தான் இருக்கும். சாப்பிடும் போது உங்கள் சாப்பாட்டையே நீங்கள் கவனியுங்கள். அடுத்தவன் இலையிலே என்ன இருக்கு? பக்கத்திலே இருக்கின்றவன் எதை அதிகமாக சாப்பிடுகின்றார்? இதெல்லாம் நமக்கு என்னத்திற்கு சேர்.

எல்லோரும் சாப்பிட்டு முடிக்கும் வரை பொறுமையாக இருப்பது தான் நல்லது. நீங்கள் மட்டும் பாதியிலே எழுந்தால் பக்கத்திலே இருப்பவர்களுக்கு சங்கடமாக இருக்கும். பக்கத்திலே இருப்பவர்களும் உங்களை எழுந்து போகச் சொன்னால் எழுந்து போங்கள். விருந்துகளிலே சாப்பாடுகளை வீணாக்குவதே இந்தக் காலத்திலே நாகரிகமாகப் போய் விட்டது. சாப்பாட்டிற்கே கஷ்டப்பட்டுக் கொண்டு இந்தக்காலத்திலே பல பேர் இருக்கின்ற போது சாப்பாட்டை வீணாக்குவது எவ்வளவு பெரிய மோசம் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். வேண்டும் என்கின்ற அளவுக்கு மட்டுமே கேட்டு வாங்கி சாப்பிடுவது தான் முறை.

விருந்திலே பஃபே என்று ஒரு முறை சொல்கின்றார்களே. அதாவது உணவு வகைகளை எல்லாம் ஒரு இடத்திலே பொதுவாக வைத்து விடுவார்கள். நமக்குத் தேவையானவற்றை ஒரு தட்டிலே போட்டுக்கொண்டு வந்து சாப்பிட வேண்டியது தான். இதிலே கூட சில பேர் தேவைக்கு அதிகமாக எடுத்துக்கொண்டு வந்து வீணாக்குவதுமுண்டு சேர். இந்தக் கொடுமையை எங்கே போய் சொல்வது சேர்.

சில சமயம் கடைசியாக சாப்பிடுபவர்களுக்கு சில உணவுகள் கிடைக்காமலே போகலாம். அதைப் போய் பெரிதாக எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது. என்ன சேர் இந்தளவுக்கு கூடவா நாகரீகம் தெரியாமல் இருக்கின்றோம். இதைப் போய் பெரிதாகச் சொல்ல வந்து விட்டீர்களே என்று நினைக்கலாம். சில பேருக்கு இந்த விபரம் தேவைப்படலாம். அவர்களுக்காவது காதிலே விழட்டும் என்பதற்காகத் தான் இது.

ஒரு பெரிய திருமண விருந்து நடந்து கொண்டிருந்தது. விருந்து மண்டப வாசலிலே ஒருவர் நின்று கொண்டு வருபவர்களையெல்லாம் மிகவும் மரியாதையாக வணங்கி உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார். எப்படி தெரியுமா? வருபவர்களின் கையைப் பிடித்து முத்தமிட்டு அதன் பின்னரே உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தார். கூட்டம் எல்லாம் முடிந்த பிறகு அவரிடம் போனேன். சேர் நானும் எவ்வளவோ விருந்துகளுக்கு போயிருக்கின்றேன். இவ்வளவு மரியாதையாக கைக்கு முத்தமிட்டு வரவேற்பதை இங்கே தான் பார்க்கின்றேன் என்றேன். அதற்கு அவர். [illegible] நான் முத்தம் கொடுக்கவில்லை. முதல் பந்திக்கு வந்து [illegible] அடுத்த பந்திக்கு வருகின்றார்களா என்று மோந்து [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் வடக்கிற்கு தங்கம், வெண்கலம்

தேசிய மட்ட கனிஷ்ட பிரிவு பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் வடக்கு மாகாணம் தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கங்களை கைப்பற்றியுள்ளது.

அகில இலங்கை தேசிய மட்ட கனிஷ்ட பிரிவு பெண்களுக்கான பளுதூக்கல் போட்டி பொலநறுவையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடை பெற்றது.


இதில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.கோசியா 53 கிலோ எடை பிரிவில் 110 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் 69 கிலோ எடைப்பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை பிரிதிநிதித்துவம் செய்த ஆர்.ஸ்ரீவித்தகி 96 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)






# நறுவிலிக்குள மைதான கட்டுமான பணி முன்னெடுப்பு

## மன்னார் விஜயத்தில் அமைச்சர் சுனில்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகளைச் சந்திக்கும் வகையிலும் மற்றும் மாவட்ட இளைஞர்கள் விளையாட்டு துறை சார்பாக எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராய்வதற்கான விஜயம் ஒன்றை நேற்று முன்தினம் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே மேற்கொண்டிருந்தார்

மன்னார் பள்ளிமுனை விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கில் இடம்பெற்ற குறித்த சந்திப்பில் மன்னார் மாவட்ட விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள், இளைஞர்கள், தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த சந்திப்பின் போது நீண்ட காலமாக கட்டுமான பணிகள் பூர்த்தி செய்யப்படாது காணப்படுகின்ற நறுவிலிக்குளம் சர்வதேச விளையாட்டு மைதான பணிகளை விரைவில் மீண்டும் ஆரம்பிக்க உள்ளதாக அமைச்சர் தெரிவித்திருந்தார்.

அதே நேரம் குறித்த மைதானத்தின் தற்போதைய நிலை தொடர்பில் பார்வையிடுவதற்காக அமைச்சர் தலைமையிலான குழுவினர் நறுவலிக்குளம் சர்வதேச மைதான பணிகள் இடம் பெற்றுவரும் பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர். (6-8-285)

# மனித நுகர்விற்கு ஒவ்வாத உணவுப் பொருட்கள் அழிப்பு

(நெளுக்குளம்)

ஒட்டுசுட்டான் பகுதியில் சுகாதாரப் பரிசோதகர்கள் நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையில் மனித நுகர்வுக்கு ஒவ்வாத உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டதோடு, உணவுக்கடைகள் மூடப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஒட்டுசுட்டான் சுகாதாரப் பரிசோதகர்களான லோஜிதன், டிலக்சன், நதிருசன் ஆகிய பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து குறித்த பகுதியில் நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையின் போது உணவகமொன்றில் 10 கிலோ ரொட்டி, றோல்ஸ் போன்ற மனித நுகர்வுக்கு ஒவ்வாத உணவு பொருட்கள் கைப்பற்றப்பட்டு சுகாதாரப் பரிசோதகர்களால் அழிப்பு செய்யப்பட்டிருந்தது.

மேலும் குறித்த கடை சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்துள்ளது. இதனால் கடையை பூட்டி குறித்த கடையை சுகாதாரமான முறையில் இயங்க நடவடிக்கை எடுக்க கால அவகாசம் வழுங்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த கடை உரிமையாளருக்கு எதிராக எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. (6-8-299)


# வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் 01.04.2025 நாளை காலை, மாலை பக்தோற்சவமும் கல்யாண சுந்தரர் அருள்மிகு காட்சியும்

**முன்னைப் பிறவியிற் செய்த முதுதவம்**
**பின்னைப் பிறவியின் பேற்றால் அறியலாந்**
**தன்னை யறிவது தறிவாம் தன்றிப்**
**பின்னை யறிவது பேயறி வாகுமே**

திருமூலர் திருமந்திரம்

முதிர்ந்த நல்ல தவம் பயனால் அறியலாம். ஆன்மாவாகிய தனது நிஜ சொரூபத்தை அறிவது உண்மை ஞானமாகும். **ஆன்மாவின் நிஜ சொரூபத்தை அறியாத வரைக்கும் சிவஞானம் உதயமாகாது.**

இன்று காலை முருகன் தரிசனையை அருள்வாயே

**இருவினையின் மதி மயங்கித் திரியாதே,**
**எழுநரகில் உழலும் நெஞ்சு உற்று அலையாதே,**
**பரமகுரு அருள் நினைந்திட்டு, உணர்வாலே**
**பரவு தரிசனையை என்று எற்கு அருள்வாயே.**
**தெரிதமிழை உதவு சங்கப் புலவோனே!**
**சிவன்அருளும் முருக! செம்பொன் கழலோனே!**
**கருணைநெறி புரியும் அன்பர்க்கு எளியோனே!**
**கனகசபை மருவு கந்த! பெருமாளே!**

இருவினையினால் அறிவு மயக்கம் அடைந்து திரியாமல், ஏழு நரகங்களிலும் கலக்க முறுதற்கு உரிய நெஞ்சத்தைப் படைத்து அலையாமல் ஆலயத்தில் பிற சிந்தனை இல்லாது குருமூர்த்தியின் திருவருளை நினைவில் வைத்து **ஞானத்தெளிவாய் உனது தரிசனக் காட்சியைத் தந்து,** வைத்தீஸ்வரன் பெற்றருளிய முருகனே, அருள் நெறியையும் அன்பு நெறியும் அனுஷ்டிக்கும் கந்தப் பெருமானே!
**இந்த இருதிருமுறையும் தினம் ஓதலாம்.**

திருக்கோயிலுக்குச் செல்பவர் முதலில் தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தை வணங்கி உள்ளே பத்ரலிங்கமாகிய பலிபீடத்தையும் கொடிமரத்தையும் நந்திதேவரையும் வணங்க வேண்டும் என்பது சிவாலய தரிசனவிதி. பலிபீடத்தை வணங்கும்போது அங்கே சிவமாகப் பாவித்து தமது செருக்கை **அவ்விடத்தில் பலியிட்டு எல்லாம் உன் செயலன்றி என் செயல்யாதும் இல்லை எனத்தெளிந்து ஆண்கள் அட்டாங்க நமஸ்காரம், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம்** வணங்க வேண்டும்.

மூலலிங்கம் ஒளிவடிவமானது அவ்வொளி பாசங்களை நீங்கி தூய்மை செய்வது நிறைந்த ஞானத்தைக் குறிக்கும் மாட்சிமைப்பட்ட சோதிவடிவான சிவலிங்கம் ஆகும். அவ்விறைவனிடம் ஒப்புக்கொடுத்தல் வழிபாடு அடியவர்களுக்கு பொருந்திய கடமையாகும்.

விநாயகர் உற்சவத்தைத் தொடர்ந்து இன்று **காலை முத்துக்குமாரசாமியாக வள்ளி தெய்வானை சுப்பிரமணியம் தரிசித்து** சாயந்தரம் பக்தோற்சவத்தில் கலந்து நால்வர் தரிசனத்தில் அவர்களது பூரண ஆசீர்வாதம் பெற்று திருமுறை ஓதுவோம்.

பங்குனித் திருவிழா நாளிலே 01.04.2025 கல்யான சுந்தரர் அருள் மாலைக் காட்சி எல்லாவுயிர்களும் திருவருளைப் பெற்று ஈடேறுமாறு அடியவர்களுக்கு தமது எல்லையில்லாத பேரருள் திருக்கோலத்தை உள்ளங் குளிரக் காட்டியருளுவார். கல்யாண சுந்தரர் காட்சியாக இறைவன் திருவீதியில் திருவுலா வருவது பூவுலகத்தவர்களுக்கு அருள் செய்தற் பொருட்டாகும். இடபம் முதலிய பல வாகனங்களில் எழுந்தருளுவது இயக்க, இராக்கதர், அவுணர், பைசார் முதலிய தீயோரை யொறுத்தன் பொருட்டு தேவர் மனிதர் நல்லோரைக் காத்தற் பொருட்டு என்று நூல்கள் கூறும்.

சுவாமி திருவுலாக் கொண்டருளும் போது ஆசாரியர் சுவாமிக்கு வலது பக்கத்திலும் பாதுகாலவர் இடப்பக்கத்திலும் வழிபடும் அடியார்கள் பின்பக்கத்தில் தேவாரம் பாராயணத்துடன் அன்புடன் பிறவார்த்தை நீக்கி போதல் வேண்டும்

நாமும் திருமுறைகளை ஓதி **ஈழத்துச் சிதம்பரம் ஆலய பங்குனித் திருவிழாவினை 2026 ஆம் ஆண்டு காண்போம்.** படமாடும் கோயில்களாகிய பரமன் ஆலயங்களையும் நடமாடும் கோயில்களாகிய மெய்யடியார்களையும், வீடுபேற்றிற்கான அத்தருபயிற்சித் தானங்களாகவும் மடாலயங்களை அன்னதானங்களாக கொண்டு சிவ வழிபாடு இயற்றுவார்க்கு இறைவன் சிவப்பேறு வழங்குகிறான்.

கருணையே வடிவாய் எங்கும் நிறைந்துள்ள கண்ணுதற்கடவுளை மெய்யன்புடன் போற்றி வழிபட்டால், முத்தி நிச்சயம்.

முத்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனை பத்திநெறி தந்த ஈழுத்துச் சிதம்பரத்தை த்ரிசிக்க முத்தி என்பது ஆன்றோர் அனுபவம்.



க.கு.க.சிவபாலன்,
போசகர், ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயம்

(சி-2576)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

735





பிறகு பாண்டிய நாட்டாருடன் சேரும் எண்ணத்தை விட்டுவிட்டேன். நீ சொல்கிறபடி, என் அத்தையின் அன்பு தெய்வீகமான அன்புதான். ஆனால் என் அத்தையைப் போல நான் இருக்க மாட்டேன்." "பின்னே என் செய்வாய்?"

"என்னை எந்த இராஜ குமாரனாவது வஞ்சித்து மோசம் செய்தால், பழிக்குப்பழி வாங்குவேன். அவனையும் கொல்வேன் அவனுடைய மனதை என்னிடமிருந்து அபகரித்தவளையும் கொல்லுவேன். பிறகு நானும் கத்தியால் குத்திக்கொண்டு செத்துப் போவேன்!" "கடவுளே! என்ன பயங்கரமான பேச்சுப் பேசுகிறாய்?"

"அமுதா! இரண்டு வருடமாக என் மனதிலுள்ள கொதிப்பை நீ அறிய மாட்டாய். அதனால் இப்படிச் சாத்வீக உபதேசம் செய்கிறாய்!" "உன் அத்தைக்கு இல்லாத கொதிப்பு உனக்கு என்ன வந்தது!"

"அது என் அத்தையின் சமாச்சாரம் இது என் சமாச்சாரம்!" "உன்னுடைய சமாச்சாரமா? உண்மைதானா, பூங்குழலி! நிதானித்துச் சொல்!"

"ஆம், அமுதா! என் உடம்பிலிருந்து கொஞ்ச இரத்தத்தையும், அந்த வானதியின் உடம்பிலிருந்து கொஞ்ச இரத்தத்தையும் எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால், ஏதாவது வித்தியாசம் இருக்குமா?"

"ஒரு வித்தியாசமும் இராது." "அவள் எந்த விதத்திலாவது என்னைவிட உயர்ந்தவளா? அறிவிலோ, அழகிலோ, ஆற்றலிலோ?"

"ஒன்றிலும் உன்னைவிட உயர்ந்தவள் அல்ல. நீ அலை கடலில் வளர்ந்தவள். அவள் அரண்மனையில் வளர்ந்தவள். நீ காட்டு மிருகங்களைக் கையினால் அடித்துக்கொல்லுவாய்! கடும் புயற்காற்றில் கடலில் ஓடம் செலுத்துவாய்! கடலில் கை சளைத்துத் தத்தளிக்கிறவர்களைக் காப்பாற்றுவாய்! வானதியோ கடல் அலையைக்கண்டே பயப்படுவாள்! வீட்டுப் பூனையைக் கண்டு பீதிகொண்டு அலறுவாள்! ஏதாவது கெட்ட செய்தி கேட்டால் மூர்ச்சையடைந்து விழுவாள்!"

"அப்படியிருக்கும்போது இளையபிராட்டி என்னைத் துச்சமாகக் கருதக் காரணம் என்ன? வானதியைச் சீராட்டித் தாலாட்டுவதின் காரணம் என்ன?"

"பூங்குழலி! இளையபிராட்டியின் மீது நீ வீண்பழி சொல்லுகிறாய். அவருக்கு வானதி நெடுநாளையத் தோழி. உன்னை இப்போதுதான் இளைய பிராட்டிக்குத் தெரியும். இளவரசரைக் கடலிலிருந்து காப்பாற்றி இங்கே கொண்டு வந்து சேர்த்ததற்காக உனக்கு எவ்வளவோ அவர் நன்றி செலுத்தவில்லையா?"

"ஆம்! அந்த அரண்மனைச் சீமாட்டியின் நன்றி இங்கே யாருக்கு வேணும்? அவளே வைத்துக் கொள்ளட்டும். அமுதா! இளவரசரைப் படகில் ஏற்றிக்கொண்டு திரும்ப புத்த விஹாரத்துக்குப் போக வேண்டுமாயிருந்தால், நீ மட்டும் படகைச் செலுத்திக் கொண்டுபோ! நான் வந்தால், ஒரு வேளை வேண்டுமென்றே படகைக் கவிழ்த்தாலும் கவிழ்த்து விடுவேன்"


"ஒருநாளும் நீ அப்படிச் செய்யமாட்டாய், பூங்குழலி! இளவரசர் என்ன குற்றம் செய்தார், அவர் ஏறியுள்ள படகை நீ கவிழ்ப்பதற்கு?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தாத்தாவின் அறிவு



ஒரு ஊரில் ஒரு மிகப் பெரிய ராஜா இருந்தார். ஒருநாள் அந்த ராஜா வெளி நாட்டுக்குப் போக நினைத்தார், அதனால் தன்னுடைய 30 வயது மகனை அரசராக நியமித்தார். வயசு கொஞ்சமாக இருந்தாலும் அமைச்சர்களோடு ஆலோசித்து நல்லபடியாக ஆட்சி செய்ததால் நிரந்தர அரசனாக உன்னை நியமிக்கின்றேன் என்று சொன்னார்.

ஆனால் திடீர் என்று பதவி கிடைத்ததால் அகங்காரம் வந்து விட்டது அந்தப் புது அரசருக்கு, இந்த வயதான அமைச்சர்களிடம் இருந்து எப்படி விலகி நின்று ஆட்சி செய்வது என்று யோசித்தார்.

உடனே 50 வயதிற்கு மேல இருக்கின்ற எல்லோரும் இந்த நாட்டுக்கு வீண் பாரம். அவர்களால் நாட்டுக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை. அதனால் 50 வயதிற்கு மேல இருப்பவர்களை எல்லாம் நாடு கடத்துவேன் என்று அறிவித்தார்.

அதன்படி நாட்டில் இருந்த எல்லா வயதானவர்களும், கூடவே வயதான அமைச்சர்களும் நாட்டை விட்டே வெளியேறி விட்டார்கள். ஆனால் ஒரே ஒரு விவசாயி மட்டும் தன்னுடைய தாத்தாவைப் பிரிய மனம் இல்லாமல் வீட்டுக்குள்ளேயே ஒரு அறையில் அவரை ஒழித்து வைத்தார். யாருக்கும் தெரியாமல் அவரை அறைக்குள்ளேயே இருக்கச் சொன்னார் அந்த விவசாயி.

ஒரு நாள் திடீர் என்று பெரிய மழை பெய்தது. அந்த நாட்டில் இருக்கின்ற எல்லா இடமும் தண்ணீரிலே மூழ்கி போய் விட்டது. அந்த நாட்டில் இருக்கின்ற விவசாய நிலத்தில் விதைத்திருந்த விதைகளும் புதிதாக முளைத்திருந்த செடிகளும் தண்ணீரிலே அடித்துச் செல்லப் பட்டு விட்டது.

மழை நீர் வடிந்ததற்குப்பிறகு அந்த நாட்டிலே விவசாயம் செய்ய ஒரு விதை கூட மிச்சம் இல்லாமல் போய் விட்டது. நாட்டில் இருந்தவர்கள் எல்லாம் அதிகம் அனுபவம் இல்லாத இளவயது விவசாயிகள் மட்டுமே. அதனால் அவர்களுக்கு எப்படி திரும்பவும் விவசாயம் செய் வது என்று தெரியவில்லை. அதனால். அந்த நாட்டில் மிகப் பெரிய பஞ்சம் தலை விரிக்கத் தொடங்கியது. ஒரு வேலை சாப்பாட்டுக்கே வழி இல்லாமல் எல்லோரும் பட்டினி கிடந்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான அன்பு என்பது எவ்வித செயற்கைத்தனமும் கலக்கப்படாத நூறு சதவீதம் தூய நிலை.
– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## துள்ளுகின்ற இனவாதிகளே உங்களின் நினைப்பு என்ன?

முன்னாள் இராணுவத் தளபதிகள் லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, ஜெனரல் சவேந்திர சில்வா, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட மற்றும் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகிய நான்கு பேருக்கு பிரிட்டன் பயணத்தடை விதித்துள்ளது.

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின் போது சட்டவிரோதக் கொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பிலேயே மேற்குறிப்பிட்ட நான்கு பேருக்கும் பிரிட்டன் பயணத்தடை விதித்துள்ளது.

மிக நீண்ட ஆய்வுகளுக்குப் பின்னர் பிரிட்டன் மேற்போந்த முடிவை எடுத்துள்ளது.

இவ்வாறு இரண்டு முன்னாள் இராணுவத் தளபதிகள், கடற்படைத் தளபதி ஒருவர் மற்றும் கருணா அம்மான் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட பயணத்தடை சிங்களப் பேரினவாதிகள் சிலரைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

இதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார, சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ போன்றவர்கள் பயணத்தடைக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளனர்.

இதில் மகிந்த ராஜபக்ஷ விடுத்த அறிக்கையில்; புலம்பெயர் தமிழர்களைத் திருப்திப்படுத்தவே பிரிட்டன் மேற்போந்த பயணத்தடையை விதித்துள்ளது எனக் கூறியுள்ளார்.

இதேபோன்று வாசுதேவ நாணயக்கார பிரிட்டன் விதித்த பயணத்தடை மூலம் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் முயற்சிகளை பிரிட்டன் மேற்கொள்கிறது.

எனினும் அதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை எனக் கூறியுள்ளார்.

தவிர, மனித உரிமைகள் பற்றிப் பேசுவதற்குப் பிரிட்டனுக்குத் தகுதியில்லை என விமல் வீரவன்ஸ குற்றம் சாட்டியுள்ளார்.

விமல் வீரவன்ஸவின் கருத்து, நாங்கள் தமிழ் மக்களைக் கொன்றழித்தோம். இங்கு தமிழினப் படுகொலை நடந்தது. ஆனால் அதுபற்றி பிரிட்டன் எங்களிடம் கேள்வி கேட்க முடியாது எனப் பொருள் படுகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், உள்நாட்டு நல்லிணக்கச் செயல்முறையை பிரிட்டனின் தடை பாதிக்கும் என்பதாக இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கூறியுள்ளார்.

எனினும் அவ்வாறு கருத்துக் கூறிய அமைச்சர், உள்நாட்டு நல்லிணக்கச் செயல்முறை என்னவென்றும் அது எந்தளவு தூரம் பயணித்துள்ளது. எப்போது அது அமுலாகும் என்பதையும் கூறியிருந்தால் அஃது ஒரு வெளிவிவகார அமைச்சருக்கான தகைமையைச் சுட்டியிருக்கும்.

சரி, பிரிட்டன்; தான் விதித்த பயணத்தடை தொடர்பில் தனது விளக்கத்தை மிகத் தெளிவாக முன்வைத்துள்ளது.

அதாவது, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதி செய்யவே பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு தனது விளக்கத்தைப் பகிரங்கப்படுத்தியுள்ளது.

**ஆக, தமிழ் மக்களை நாங்கள் எதுவும் செய்வோம். அது தொடர்பில் யாரும் எதுவும் கேட்க முடியாது என்ற பேரினவாதச் சிங்களத் தரப்புகளின் நினைப்பை என்ன செய்வதென்று தெரியவில்லை.**

# இந்தியப் பிரதமர் மோடியின் வருகை எமக்குக்கிடைத்த இராஜதந்திரவெற்றி

## வெளிநாட்டுப்பிரதி அமைச்சர் அருண் பெருமிதம்

*(கொழும்பு)*

மிகக்குறுகிய காலத்தில் இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் அனுசரணையைபெற்றுக் கொண்டு இராஜதந்திர ரீதியாக ஒரு சக்திவாய்ந்த நாடாக நாம் உருவெடுத்து வந்துள்ளோம். இந்த வெற்றியின் முதற்படியாக எமது நாட்டிற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விஜயம் மேற்கொள்ளவுள்ளதை பார்க்கின்றோம்.

அவரின் வருகையின் பின்னர் ஏனைய நாட்டுத் தலைவர்களும் வர இருக்கின்றனர் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராஜதந்திர ரீதியாக இந்தியா எமக்கு மிக நெருக்கமான நாடு, மிகவும் அண்மையில் இருக்கின்ற நாடு தேசிய மக்கள் சக்தி தொடர்பாகவும் ஜனாதிபதி தொடர்பாகவும் எதிர்த் தரப்பினரால் பல விமர்சனம் முன்வைக்கப்பட்டன. சர்வதேச ரீதியாக எந்தவிதமான கொடுக்கல் வாங்கலையும் செய்யமுடியாது. இந்தியா பகைக்கும் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் உதவிகள் கிடைக்காது என அந்த விமர்சனங்கள் அமைந்திருந்தன.

ஆனால் இன்று மிகக்குறுகிய காலத்தில் இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் அனுசரணையைப் பெற்றுக் கொண்டு இராஜதந்திர ரீதியாக மிகவும் ஒரு சக்திவாய்ந்த நாடாக உருவெடுத்துள்ளோம். இந்த வெற்றியின் பின்னர் எமது நாட்டிற்கு முதலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி விஜயம் செய்யவுள்ளார்.

அதேவேளை இந்தியாவுடன் சூரிய சக்தி மின்சாரம் தொடர்பாகக் கூட்டு ஒப்பந்தம் செய்யவுள்ளோம். அதுமட்டுமல்ல இந்திய அரசின் பாரிய உதவி மூலம் கிழக்கு மாகாணத்தில் பல வேறுபட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் இடம் பெறவுள்ளன என்றார். *(ந-7)*

## ரூ. 11 மில்லியன் பெறுமதியான பீடி இலைகள் மன்னாரில் மீட்பு

*(மன்னார்)*

சட்டவிரோதமான முறையில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒருதொகை பீடி இலைகளை மன்னாரிலிருந்து கொழும்பிற்குக் கடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முருங்கன் பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இச்சம்பவம் நடந்துள்ளது.

மன்னார் இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் முருங்கன் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே குறித்த கடத்தல் வாகனத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதன் போது 40 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 11 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள 1200 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டதுடன், களனியைச் சேர்ந்த 23 வயதுடைய குறித்த வாகனத்தின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு முருங்கன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

முருங்கன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். *(ந-7,285)*

## தேர்தல் பிரசாரங்களில் அரச வாகனங்களைப் பயன்படுத்தத்தடை

### மீறினால் சட்டம் பாயும் – எச்சரிக்கிறது பப்ரல்

*(கொழும்பு)*

உள்ளூராட்சித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது அரச சொத்துக்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டால் அவற்றுக்கெதிராக தேர்தல்கள் ஆணையகம் சட்ட நடவடிக்கை எடுக்கும் என பப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது,

தேர்தல் ஆணைக் குழுவினால் இது குறித்த சுற்று நிருபமும் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய அரச அதிகாரிகள் தமது சேவை நேரத்தில் வேட்பாளர்கள் தொடர்பான பிரசாரங்களை முன்னெடுப்பது சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

அதேபோன்று ஏதேனும் அரச நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படும் போது அவை எந்தவகையிலும் எந்தவொரு வேட்பாளருக்குமான பிரசாரமாக அமைந்து விடக்கூடாது.

இது தொடர்பில் தேர்தல் கண்காணிப்பகங்கள் உன்னிப்பாக அவதானம் செலுத்தும். அரசியலமைப்பிற்கமைய இது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக் குழுவுக்கு காணப்படுகிறது. மேலும் அரச வாகனங்களைப் பயன்படுத்துவதிலும் வரையறைகள் காணப்படுகின்றன.

அரச தேவைகளுக்கு மாத்திரமே அவை பயன்படுத்தப்பட வேண்டும். மாறாக தேர்தல் பிரசாரங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டால் அதனுடன் தொடர்புடையவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அது மாத்திரமின்றி குறித்த வாகனத்துக்கு உரித்துடையவர்களே அதற்கான பொறுப்பினையும் ஏற்க வேண்டும் என்றார். (ந-7)

## உள்ளூராட்சித் தேர்தலில் பெண் வேட்பாளர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கத்திட்டம்

*(கொழும்பு)*

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்காக விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களில் இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி பால்ராஜ் தெரிவித்துள்ளார்.

“அவளின் பயணத்தை ஆதரிப்போம்” எனும் எனும் கருப்பொருளில் முன்னெடுக்கப்படும் குறித்த வேலைத்திட்டம் ஊடாக சமூக ஊடகங்கள் மூலம், வேட்பாளர்கள் வன்முறை, அடக்குமுறை, அவமதிப்பு மற்றும் பாலியல் துன்புறுத்தல் குறித்து உற்றுநோக்கப்படும்.

அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கும் வேலைத்திட்டம் பல தரப்பினரின் பங்களிப்புடன் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது என்றார். *(ந-7)*

## இராணுவத் தளபதி யாழிற்கு விஜயம்

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த றொட்ரிகோ அண்மையில் யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் போது இராணுவத் தளபதி சர்வ மத தலங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் மதத் தலைவர்களுடன் சந்தித்து கலந்துரையாடினார்.

வரணி மத்திய கல்லூரியில் மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் இராணுவத் தளபதி கலந்து கொண்டார்.

மேலும் கொடிகாமம் தெற்கில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடும் பயனாளி ஒருவரிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்திற்கு விஜயம் செய்த இராணுவத் தளபதியை, யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் வை.ஏ. பி.எம். யஹாம்பத் வரவேற்றதுடன் விசேட சந்திப்புக்களும் இடம் பெற்றன. *(ந-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய குடிநீர் இணைப்பு
## நிகழ்நிலை விண்ணப்பம் அறிமுகம்

(கொழும்பு)

புதிய குடிநீர் இணைப்புகளுக்கான நிகழ்நிலை விண்ணப்ப செயல்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை இது குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதன்படி, புதிய குடிநீர் இணைப்புகளுக்கான விண்ணப்பங்களை waterboard.lk வலைத்தளம் மூலம் சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, கோரிக்கை விடுக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் இணைப்புகள் வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்தத் திட்டம் குறித்த நடவடிக்கை அடுத்த வாரத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## 180 தேர்தல் முறைப்பாடுகள்

(கொழும்பு)

இதுவரை 180 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் கடந்த 20 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை பெறப்பட்டதாக தேர்தல் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி, வன்முறைச் செயல்கள் தொடர்பாக ஒரு முறைப்பாடும், தேர்தல் விதி மீறல்கள் தொடர்பாக 179 முறைப்பாடுகளும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளன.

பெறப்பட்ட 180 முறைப்பாடுகளில் இதுவரை 133 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-8)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நீர்முள்ளி

Botanical name- Astercantha longifolia
Family- Acanthaceae
Engl- Long Leaved barleria

ஓராண்டு வாழக்கூடிய நீர்ப்பாங்கான இடங்களில் வளரக்கூடிய முட்களைக் கொண்ட செடியாகும். இதன் இலை, விதை, வேர் அனைத்துமே மருத்துவப் பண்புகள் நிறைந்தவை. உடல் வீக்கம், சிறுநீரகக் கற்கள், சிறுநீர் எரிச்சல், இரத்தசோகை போன்ற நோய்களை நீக்க வல்லது. இதைவிட நீர் முள்ளி மூலிகையானது ஈரலை பலப்படுத்தக்கூடியதும் பாதுகாக்கக் கூடியதுமான ஒரு மூலிகையாகும். இவ் நவீன உலகில் விரைவு உணவுகள், மாத்திரைகளால் முதலில் பாதிக்கப்படக்கூடிய உறுப்பு ஈரல் ஆகும்.

நாம் எடுக்கும் உணவுகள் வயிற்றுக்குள் போய் ஜீரணமாகி குடல் பகுதியில் உறிஞ்சப்பட்டு இரசாயனசத்துக்கள் எல்லாம் ஈரலுக்கு போய், முழுமையாக கல்லீரலில் உணவுகள் சுத்திகரிக்கப்பட்டு கழிவுகளானது பித்தப்பையிலிருந்து பித்தநீரை வெளியே விடுகிறது. மீதமுள்ள பகுதி இரத்தக் குழாய்களுக்கே போகிறது. எனவே மிக மோசமான உணவுகளை சாப்பிட்டு வர கொஞ்சம் கொஞ்சமாக ஈரல் பாதிப்படைகிறது. இவ்வாறு ஈரல் பாதிப்படைந்தால் சில வேளைகளில் ஈரல் புற்று நோய் ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் கூட ஏற்படக் கூடும்.

ஆனால் இயற்கையில் கிடைக்கும் சில மூலிகைகள் அதனுடைய விதைகள் போன்றவை நமது கல்லீரலை முழுமையாக பாதுகாக்கக்கூடிய தன்மை கொண்டவை.



நமது தமிழர் மருத்துவத்தில் பின்னிப்பிணைந்த ஒரு மூலிகைச் செடி தான் நீர்முள்ளி ஆகும். இலக்கியங்களில் கூட நீர் முள்ளி என்ற மூலிகையை இக்குரம் என்று அழைக்கப்படுகிறது. இம்மூலிகையை ஆய்வுக்கு உட்படுத்தியதன்படி எலிகளுக்கு கொடுத்து பார்த்ததில் நீர் முள்ளிச் சாறு ஆனது ஈரல் கலங்களை பாதுகாக்கிறது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதாவது Hepato protective effect இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஈரல்புற்று நோயை தடுப்பதையும் எலிகளில் சோதனை செய்து நிரூபிக்கப்பட்டுள்ளது.

மூட்டுவலியை குறைக்கவும் பயன்படுத்தப்படுகிறது. இரத்தசோகை நோயையும் நீக்கக்கூடியது. இரத்த அணுக்களின் உற்பத்தியை அதிகப்படுத்தும் தன்மையும் இவ் நீர்முள்ளிக் குடிநீரால் ஏற்படுகிறது. ஆண்மை குறைபாட்டிலும் பயன்படுத்தப்படுகிறது. இவ் ஆராய்ச்சியும் ஆண் எலிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு நீர் முள்ளி விதைப்பொடி 5 கிராம் அளவு காலையில் சாப்பாட்டின் பின்பு தேனில் கலந்து தினம் ஒரு வேளை சாப்பிடலாம். எமது பிரதேசத்தில் நீர்முள்ளி சத்துச் செடியானது நீரோடை ஓரங்களில் பரவலான சேகரிக்கலாம்.

இதிலிருந்து விதைகளை பெற்றுக்கொள்ளலாம். அல்லது விதைப்பொடியாக தமிழ் மருந்துக் கடைகளில் வாங்கலாம்.

இவ் விதைப்பொடியை வாங்கி 3 கிராம் அளவு எடுத்து 150 மில்லி வெந்நீரில் போட்டுக் கரைக்க ஜெல் போலாகிவிடும்.


இது இவ்மூலிகையின் சிறப்பு அம்சமாகும். சித்தர்கள் இம் மூலிகையை காயகல்ப மூலிகை எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ் ஜெல் போன்றவை வாயிலிட்டு அது ஊறிய நீரை அப்படியே குடித்து விட வேண்டும். காலையில் தான் இப்படி எடுக்க வேண்டும். சாப்பாட்டின் பின்பு எடுத்துவர உடல் பலப்படும். இரத்த அணுக்கள் அதிகரித்து குருதிச் சோகையை நீக்கும். ஆண்மைத் தன்மையையும் அதிகரிக்கக் கூடியதாக இருக்கும். சிறுநீரகத்திலுள்ள கழிவுகளை அகற்றும் ஆற்றலும் உண்டு. சித்தர்கள் கூறுவார்கள்.

மணலை கயிறாக திரிக்கும் சக்தி இந்த நீர் முள்ளிக்கு உண்டு. உடல் தளர்ச்சி, ஆண்மைக் கோளாறு, உடல் உடை, சிறுநீரகக் கோளாறுகளை நீக்கும் ஆற்றல் உண்டு.

ரெஸ் ரெஸ் ரரோன் ஹோமோன் குறைந்து குழந்தையின்மைக்கு சிகிச்சை எடுப்பவர்களும் இவ் நீர்முள்ளி விதைச் சூரணைத்தை பயன்படுத்தலாம். கல்லீரலையும், சிறுநீரகத்தையும் பாதுகாப்பாக வைத்திருக்கும் தன்மையும் உண்டு. சிறுநீரகக் கற்கள் உருவாகுவதையும் தடுக்கக்கூடியது.

பாரம்பரியமாக நீர்முள்ளி மூலிகையில் இலைகளை சேகரித்து நன்கு கழுவி மிளகுடன் சேர்த்து அரைத்து விழுதாக்கி சுண்டக் காயளவு பிள்ளை பெற்ற தாய்மாருக்கு முதல் 10 நாட்களும் சாப்பிடக் கொடுக்கலாம். இதனால் குழந்தை பெற்ற தாய்க்கு கர்ப்பபையிலிருக்கும் கழிவுகள் எல்லாம் அகற்றப்பட்டு கர்ப்பப்பை சுத்தமாக்கப்படுகிறது. நீர்முள்ளிச் செடியை குடிநீராக காய்ச்சி 60 மில்லி அளவு





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

காலையில் மட்டும் 60 நாட்கள் எடுத்துவர சிறுநீரகக்கற்கள் படிப்படியாக கரைந்து விடும்.

அத்துடன் நோய் எதிர்ப்பாற்றலையும் அதிகரிக்கக்கூடியது. அத்துடன் இரத்தத்தில் ஈமோ குளோபின் அளவு குறைந்தவர்களும் இவ் நீர் முள்ளியை பயன்படுத்தலாம்.

நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலின் உற்பத்தியை சீராக வைத்திருக்கும் தன்மை இருப்பதால் நீரிழிவு நோயாளிகளும் பயன்படுத்தலாம்.

சித்தர்கள், மேற்கூறிய பயன்களை செய்யுளாக குறிப்பிட்டுள்ளார்கள்.

வித்துவுமாம் தாதுவுமாம் மேகரோகந் தொலையும் உந்து மதி சாரம் ஒழியுங்காண் வந்து வில் ஊறிய நீர் வீக்கம் இறக்கும் இன்புறும் கூறிய நீர்முள்ளி விதைக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்பதிகாரி...

மேலும் தெரியவருவதாவது,

லண்டனிலிருந்து வந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் குடும்பப் பிணக்குத் தொடர்பான வழக்கிலிருந்து விடுவிக்குமாறு கோரி தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு பொலிஸ் நிலைய அலுவலகத்திற்குள் வைத்து 50 ஆயிரம் ரூபாய் பணத்தினை இலஞ்சமாக வழங்க முற்பட்டுள்ளார்.

இதன்போதே குறித்த நபர் பொலிஸ் நிலையப் பொறுப்பாதிகாரியினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-7)

## யாழ் - திருச்சி...

லான நேரடி விமான சேவைகள் 47 ஆண்டுகளின் பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருச்சியில் இருந்து மதியம் 1.25 மணியளவில் புறப்பட்ட விமானம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை 2.25 மணியளவில் வந்தடைந்தது.

இதன்போது விமான நிலையத்தில் விசேட வரவேற்பளிக்கப்பட்டது.

நிகழ்வில் இந்திய துணைத் தூதர் சாய் முரளி உள்ளிட்ட துணைத் தூதரக அதிகாரிகள், விமான நிலைய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இன்டிக்கோ விமான சேவை நிறுவனத்தால் குறித்த சேவை முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த விமான சேவையானது தினசரி மதியம் 1.25 மணிக்கு திருச்சியில் இருந்து புறப்பட்டு, 2.25 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடையும். யாழ்ப்பாணத்தில் இருந்து மாலை 3.15 மணிக்கு புறப்பட்டு, திருச்சியை மாலை 4 மணியளவில் சென்றடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து சிங்கப்பூர் பயணிக்க விரும்புவோர், திருச்சி சென்று திருச்சி ஊடாக சிங்கப்பூர் பயணிக்க கூடியவாறான விமான சேவை திட்டமிடப்பட்டுள்ளமையால், கொழும்பு சென்று சிங்கப்பூர் செல்வதற்கான நேர விரயம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7,33)

## சர்வதேச...

நிலையத்திற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை விஜயம் மேற்கொண்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விமான நிலையத்தை முதல் தடவையாக பார்வையிட்ட அமைச்சர் விமான நிலையத்தின் விஸ்தரிப்புகள் தொடர்பிலும் அதன் சேவைகள் தொடர்பிலும் விமான நிலையத்தின் சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் ஹர்ச அபய விக்ரம மற்றும் ஏனைய ஊழியர்களிடம் கேட்டறிந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட பிமல் ரத்நாயக்க, பழைய அரசாங்கம் போல் நாம் பொய் கூறமாட்டோம். விமான நிலையத்தின் திட்டமிடல் வரைபடம் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்கள் நிறைவடைந்துள்ளன.

எனவே அதனுடைய திட்டமிடலுக்கு ஏற்ப நான்கு மாதங்களுக்குள் பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைக்கப்படும் என்றார்.

இதன்போது கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், வைத்தியர் ஸ்ரீபவானந்தராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந-7)

## ஏப் 21க்கு...

முயற்சிகள் நடைபெற்று வருவதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தெய்யந்தர பகுதியில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

தாக்குதல்களுக்குப் பின்னால் இருப்பதாகக் கூறப்படும் குழுவை அம்பலப்படுத்த குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தற்போது பணியாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ந-7)

## கிளீன் ஸ்ரீ லங்கா...

தூய்மையாக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையினர், இராணுவம், பொலிஸார் ஆகியோரின் ஒத்துழைப்புடன் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் இனிவரும் காலங்களில் பேருந்து நிலையத்தினுள் விளம்பரங்கள் ஒட்டுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (ந-7,33)

## இவ்வருட...

இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க,

13ஆம் திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தலை முன்னெடுப்பது தொடர்பிலும் நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தோம்.

அதற்கிணங்க உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் இந்த வருடத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்த்துள்ளோம். வட மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு எந்த விதத்திலும் நாம் இடையூறு ஏற்படுத்தமாட்டோம் என்றார். (ந-7)

## டிரான்...

சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்தார்.

இதுதொடர்பாக வாக்கு மூலம் பதிவு செய்வதற்காக முன்னாள் பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு இன்று (31) அழைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாகவே பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## சங்...

கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப் படையின் உதவியுடன் மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது வான் ஒன்றில் கஞ்சா பொதிகளை எடுத்துச் சென்ற வவுனியாப் பகுதியைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,30)

## தபால்...

யுள்ளதாக அரசாங்க அச்சக அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஏப்ரல் 5ஆம் திகதிக்குள் வாக்குச்சீட்டுகளை தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அச்சக பணிப்பாளர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித்தார்.

மேலும், உள்ளாட்சித் தேர்தல்கள் தொடர்பான அதிகாரபூர்வ தேர்தல் அறிவிப்புகள் மற்றும் வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந-7)

மஹஜன சம்பத
திகதி 2025.03.30
சீட்டிழுப்பு இலக்கம் 5791
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 3 4 3 6 3 4
அத சம்பத D 3 6 3 4
சீட்டிழுப்பு இலக்கம் 0366
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.03.30
சீட்டிழுப்பு இலக்கம் - 1821
O 20 33 72 81 O
Double Chance 21075

மெகா பவர்
திகதி 30/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2139
P 12 13 55 57 65

ஜய ஜய JAYA
திகதி 2025.03.30
சீட்டிழுப்பு இலக்கம் 059
Q 7 6 1 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4033
சீட்டிழுப்பு திகதி 30.03.2025
T 27 28 41 70
T

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.30
சீட்டிழுப்பு இலக்கம் 1100
தனுசு 10 23 34 50 தனுசு
42591 36

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
30.03.2025 வெற்றி வாரம் 499
W 8 7 1 2 7 3
83515
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.34,598,576.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2765
சீட்டிழுப்பு திகதி 2025.03.30 தினம் ஞாயிற்றுக்கிழமை
02 41 47 49 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,452,944.00

சனிதா
திகதி 30.03.2025 வெற்றி வாரம் 4926
05 18 32 71 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,853,385.20
ரூ. 100,000/- 77006

சசிரி
வெற்றி வாரம் 654
சீட்டிழுப்பு திகதி 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 16 22 27
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4477
சீட்டிழுப்பு திகதி 30.03.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
02 07 30 43 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,574,718.00
167641

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 28 01 32 40 42
சீட்டிழுப்பு வாரம் 1941
30.03.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.570,274,811.40

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2591
சீட்டிழுப்பு திகதி 2025.03.30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,258,582.40
அத கோடிபதி ADA KOTIPATHI
02 18 42 63 W
950371

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DMI யாழ். நகர்

## A/L 2027 கலை, வர்த்தகம்

**ஆரம்பம் : 05.04.2025 (சனி) காலை 9 மணி**

### வர்த்தகம்
(தமிழ், ஆங்கில மொழி மூலம்)
- கணக்கீடு – D.Sam
- வணிகக்கல்வி – T.S.ரிஷி
- பொருளியல் – M.லிஜிதன்
- ICT – N.அம்பி, A.டிலக்ஷன்

### கலை
- தமிழ் – R.S.சந்திரசேகர்
- இந்து நாகரிகம் – P.ஜோதீஸ்வரன்
- வரலாறு – M.பத்மன்
- புவியியல் – N.பாபு
- அரசியல் – K.S.இளங்கோ
- அளவையியல் – E.S.பவன்
- விவசாயம் – V.சசி
- கிறிஸ்தவம் – M.ஸ்ரீபன்
- நாடகம் – K.மங்களேஸ்
- ஊடகம் – V.K.நவநீதன்
- மனைப்பொருளியல் – V.சசி
- ICT – N.அம்பி, A.டிலக்ஷன்

TP : 077 848 0604 (C-2575)

# DCM - யாழ். நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

## A/L 2027
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம் – 06.04.2025 (ஞாயிறு) 9.00 Am
நிர்வாகம் : 077 778 9815
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (C-2581)

# மலிவு விலையில்
பாடசாலை மாணவர்களுக்கான




காலுறைகள்
மொத்த கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு
ஸ்ரீமுருகன் No.303, K.K.S Road, Jaffna. (C-2582)

# KBK கொழும்புத்துறை
புதிய பிரிவு
## A/L 2027 கணக்கீடு



MR.BALAKAJEN SLTS
B.com(Jaf), H.N.Dip.in.Acc(ATI), Dip.in.Edu(OUSL), M.com(Hons) Acc.spl

ஆரம்பம் 02.04.2025 புதன்கிழமை மாலை 5.00 மணி

A/L 2025/ DAY /2026
பிரிவுகளுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

ADMISSION OPEN NOW
A+ சித்தி உறுதி
உங்கள் அனுமதிகளுக்கு
077 452 0043 (964)

# UNIVERSAL SCIENCE ACADEMY
## A/L SCIENCE STREAM 2027 BATCH



**Physics**
M.Kugan [BSc (hons)]
**Chemistry**
T.Sharangan [BSc-R]

ADMISSIONS FROM 30 March 2025
4.30 PM - 8.30 PM
More info 77996888
K.K.S Road Chunnakam-Jaffna (3768)

# உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- திருகோணமலை
- கோப்பாய்
- பண்டத்தரிப்பு
- கொழும்பு
- சுன்னாகம்
- மானிப்பாய்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- புத்தூர்
- சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-2583)

# வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# Techna Technical Institute
THE BEST QUALITY EDUCATION FOR TECHNOLOGY STREAM
Technatechnicalinstitute

## A/L தொழினுட்பப்பிரிவு
## புதிய கல்வியாண்டு
# A/L 2027
அனுமதி: 01.04.2025 செவ்வாய், காலை 10.45 மணிக்கு.
077 170 3549 வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம். (C-2585)


# மரண அறிவித்தல்

## செல்லர் கணபதிப்பிள்ளை

**(ஓய்வுபெற்ற பரிசாரகர் - யாழ்.போதனா வைத்தியசாலை, முன்னாள் தொழிலதிபர் - கைத்தறி ஆடை உற்பத்தி நிலையம் அரியாலை)**



தோற்றம் 09.06.1928 மறைவு 30.03.2025

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை இறைவனின் திருப்பாதங்களைத் தழுவிக் கொண்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாவியார் செல்லர் - சோதி தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அன்னமலர், அம்பலம் (நாதஸ்வர வித்துவான்), இசைக்குயில் நேசமலர், கலாபூசணம் பொன்னுத்துரை மற்றும் தியாகராஜா(கனடா - முன்னாள் உத்தியோகத்தர் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, குணலஷ்மி, நவரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கனகரத்தினசிங்கம் (முன்னாள் ஊழியர் - யாழ். போதனா வைத்தியசாலை) மற்றும் அரியரத்தினம்(முன்னாள் ஊழியர் - யாழ். பல்கலைக் கழகம்) காலஞ்சென்றவர்களான காத்தி, மனுவல் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் மைத்துனரும் உதயகலா(ஜேர்மன்), காலஞ்சென்றவர்களான உதயசிறி (பரிசாரகர் - யாழ். மாநகர சபை), நந்தபாலா (உரிமையாளர் - ரம்மிஸ் ஸ்பொட்), ஸத்தியபாலா (தமிழீழன்) மற்றும் குகபாலா (அமெரிக்கா), விஜயபாலா (ஆசிரியர் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரலிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற மன்மதராஜன் (முன்னாள் மேற்பார்வையாளர் - யாழ்.மாநகர சபை), யசோதரா(உத்தியோகத்தர் - கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), ராஜினி (அமெரிக்கா), சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும் திலீபன்(ஜேர்மனி), திவ்யா(ஜேர்மனி), மதீசன் (போதகர் மன்னா தேவாலயம் - சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு இயக்குனர்), திபோஷன், ரம்மியபாபு (உரிமையாளர் - ரம்மிஸ் Decoradtion), சியாம்சன் (Dialog உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்), நந்துயன் (மாணவன் - Northern Uni), ஜித்தேஷ்பாலா (மாணவன் - யாழ். மத்திய கல்லூரி), லக்சனியா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னர்ரின் இறுதி அஞ்சலி நாளை 01.04.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல, 43A, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

0777 111 706
0777 251 297
0777 226 239

தகவல் குடும்பத்தினர் (C-2584)(3796)


# உடனடி மலிவான விற்பனைக்கு!
புதியரக மோட்டார் சைக்கிள் Clamour (India)
மோட்டார் கார் Nissan (Japan)
இடம் : சண்டிலிப்பாய் (யாழ். மாவட்டம்)
077 666 3823
077 524 3681 (3769)

# மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1988 ஆம் ஆண்டு பிறந்த சுவாதி 4 ஆம் பாதம், கிரக பாவம் 20, செவ்வாய் 3 இல், UK இல் Citizenship கொண்ட பொறியியலாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் விரும்பத்தக்கது. (3776)
பென்சுலானந்தா திருமண சேவை
whatsapp : + 94769738962
+ 94705546386

# தென்மராட்சி மண்ணில்
## ST ECONOMICS HALL
பங்களா வீதி, மீசாலை.
## A/L 2027 வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் 01.04.2025 செவ்வாய் 3.00 Pm யாழ். மாவட்ட முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

| | |
|---|---|
| பொருளியல் | : ஜெயக்குமார் (JK) தர்மிலன் (ST) |
| கணக்கீடு | : பாலகஜன் (KBK) |
| வணிகக்கல்வி | : பாலசபேஷ் (SKB) |

"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெறுவர்"
2025,2026(A/L) வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
Theory + Paper Class + MCQ
"தரமான கற்பித்தல் உரமான பெறுபேறு"
T.P - 077 872 5113 (964)

# டொச் மொழி வகுப்புக்கள்
பிரபல ஆசிரியர் திரு. R.மயூரன் அவர்களின் ஜேர்மன் மொழி (டொச்) வகுப்புக்கள் 03.04.2025 இல் இருந்து நெல்லியடியிலும் ஆரம்பமாகின்றன.
More details : German Swiss Academy
Branch : Kodikamam Road, Nelliyady. (Near Bus Stand)
Office : Kasthuriyar Road, Jaffna. (Municipal complex 2nd floor)
077 645 4998/021 790 9946 (3783)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.